இயலாமைகளை கொண்டுள்ளோர்களுக்கான சுயாதீனமான வாழ்க்கை மற்றும் இலங்கையில் உதவி சாதன தொழில்நுட்ப பயன்பாட்டிற்கான தடைகள்

டிசம்பர் 2020

LIRNEasia
Pro-poor. Pro-market.

FORD FOUNDATION

லர்ன்*ஏஷியா*: ஏழைகளுக்கும், சந்தைக்கும் ஆதரவானதுமான ஆசிய பசிபிக் சிந்தனைக் குழு; உள்கட்டமைப்பு கொள்கை மற்றும் ஒழுங்கு முறையில் கவனம் செலுத்தல்

எங்கள் நோக்கம்:

"வளர்ந்து வரும் ஆசிய பசுபிக் பகுதியில் அறிவு, தகவல் மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றின் பயன்பாட்டின் மூலம் அவர்களின் அரிய மற்றும் நுன்மையான உள்கட்டமைப்புகளின் பயன்பாட்டை எளிதாக்கி; மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த ஆராய்ச்சி மூலம் கொள்கை மாற்றத்தை ஊக்கப்படுத்துதல்"

செயல் திட்டத்தின் சுருக்கம் (1)

- இந்த ஆய்வானது இலங்கையில் பார்வை, நடமாட்டம், செவித்திறன் மற்றும் பேச்சு இயலாமைகள் உள்ளவர்களின் சுயாதீனமான வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முயன்றது. நாட்டின் மேற்கு, ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற இடங்களில் 15-65 வயதுக்கு இடைப்பட்ட இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களை ஆராய்வதற்காக பண்பறி ஆராய்ச்சி முறைகள் பயன்படுத்தப்பட்டன. அவர்கள் இலக்கு கவனக் குழு கலந்துரையாடல்கள் (எவ்.ஜி.டி கள்), இலக்கு கவனம் இனப்பரப்பு விளக்கவியல்கள் (எவ்.இ) மற்றும் ஆழமான நேர்காணல்கள் (ஐ.டி.ஐ கள்) ஆகியவற்றின் மூலம் நேர்காணல் செய்யப்பட்டு அவதானிக்கப்பட்டனர். வாஷிங்டன் குழுமத்தின் சிறு குறுகிய தொகுப்பு கேள்வித்தாள் மூலம் பதிலளித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தம் 101 பேர் நேர்காணல் செய்யப்பட்டனர். அவர்களில் 80 பேர் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பயனர்கள். பதிலளித்த பெண்களின் மொத்த எண்ணிக்கை 53 மற்றும் ஆண்கள் 48 பேராவர் .
- இலங்கையில் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் சசுயாதீனமாக வாழ்வதற்கு பங்களிக்கும் வகையில், திறன்பேசி /ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் பிற தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான பயன்பாடுகளை பரவலாகக் கிடைக்கச் செய்யும் புத்தாக்கச் சூழல் அமைப்புகளை ஊக்குவிப்பதே ஆராய்ச்சியின் குறிக்கோளாகும். குறிப்பிட்ட குறிக்கோள்கள் என்றவகையில் சுயாதீனமான வாழ்க்கையை மேற்கொள்வதில் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் எதிர்கொள்ளும் தற்போதைய சவால்களை அடையாளம் காண்பது, தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப உதவி தயாரிப்புகளைப் பயன்படுத்துவதில் உள்ள இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொள்வது மற்றும் சுயாதீனமான வாழ்க்கைக்கான தீர்வுகளை உருவாக்கல் போன்றவையாகும்.
- அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள், பொது இடங்களுக்கான அணுகல், கல்வி, தொழில் பயிற்சி, வேலைவாய்ப்பு, பொழுதுபோக்கு மற்றும் சமூக வலையமைப்புகள் பற்றி அரைபங்கில் கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல்கள் ஆராயப்பட்டன. மேலும் கலந்துரையாடல்கள் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பயனர் அனுபவங்களைச் சுற்றியே இருந்தன.
- இயலாமை பற்றிய சமூக மாதிரியானது சமூக மற்றும் மருத்துவ அம்சங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் தனிப்பட்ட காரணிகளை உள்ளடக்கியது

செயல் திட்டத்தின் சுருக்கம் (2)

- இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களால் சுதந்திரமான வாழ்க்கையின் எட்டு முக்கிய அம்சங்களை இந்த ஆராய்ச்சி அடையாளம் கண்டுள்ளது. ஆராய்ச்சியில் கருதப்படும் மூன்று இயலாமை வகைகளில் இவை பொதுவானவை என்றாலும், பல்வேறு வகையான இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களால் இந்தச் செயல்பாடுகளைச் செய்வதற்கு பல்வேறுபட்ட வழிகள் உள்ளன. மேலும், பொருளாதார வளங்கள், கலாச்சார மற்றும் பௌதீகச் சூழல் போன்ற சூழ்நிலைக் காரணிகளின் அடிப்படையில் இந்தச் செயல்பாடுகளைச் செய்வதற்கான வழிமுறைகள் வேறுபடுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.
- தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் என்பது சுயாதீனமான வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதில் தனிப்பட்ட பாதுகாப்பு, பொதுவான நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை, உடலுறுதி, சீர்ப்படுத்துதல் மற்றும் சுத்தம் மற்றும் பொருத்தமான ஆடை அணிவிப்பு ஆகியவை அடங்கும். பொது சுகாதாரத்திற்கான அணுகல் இந்த விஷயத்தில் முக்கியமானது.
- வீட்டு நிர்வாகத்தில் வீட்டுச் சுற்றுச்சூழலைப் பராமரித்தல் மற்றும் இசைவாக தழுவலும், உபகரணங்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்துவதற்கான திறன்கள் ஆகியவையும் அடங்கும். பதிலளித்தவர்களில் பெரும்பாலானோர் வீட்டு வேலைகளுக்குப் பழக்கமானோர், மேலும் அவர்கள் மற்றவர்களின் குறைந்தபட்ச உதவியுடன் வீட்டில் வழக்கமான வேலையை செயல்படக்கூடியதாய் உள்ளனர்.
- சுயாதீனமாக உணவைத் தயாரிக்கும் திறன் சுயாதீனமான வாழ்க்கைக்கு பெரிதும் உதவுகிறது. உணவு வாங்குதல், உணவை சேமித்தல், சமைத்தல், தகுந்த உணவுப் பழக்கம் மற்றும் உணவு தயாரிக்கும் பகுதிகளையும் பாத்திரங்களையும் சுத்தம் செய்தல் ஆகியவை தொடர்புடைய பிற செயல்பாடுகளாகும். இந்தச் செயல்பாடுகள் பதிலளிப்பவர்களின் சமூக-பொருளாதாரப் பின்னணிக்கு மிகவும் பொருத்தமானவையாகும்.
- செயற்கை கருவி பயன்படுத்துவோர் மற்றும் பார்வை குறைபாடுகள் உள்ளவர்கள் ஆடைகளை வாங்கி அணியலாம் என குறிப்பிட்டுள்ளனர்

செயல் திட்டத்தின் சுருக்கம் (3)

- வங்கிகளுக்கான அணுகல் மற்றும் வங்கி ஊழியர்களுடன் தொடர்பு கொள்ளும் திறன் ஆகியவை சுயாதீனத்தின் குறிப்பிடத்தக்க குறிகாட்டிகளாகும். இணையவழி வங்கி வசதிகள் இருந்தாலும், அத்தகைய தொடர்புமுறைக் கூறுகள் இன்றியமையாதவை.
- பொதுவி டங்களில் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் பிரசன்ன த்தால், தவிர்க்க முடியாமல் அவர்கள் மீதான அணுகுமுறையை மாற்றுகிறது. எனவே இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் சமூக நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு தேவை. சாலைப் பாதுகாப்பு, பொதுப் போக்குவரத்து அணுகல் வசதிகள் மற்றும் உள்ளூர் போகுமிடத்தின் வழியைக் கண்டறிதல் ஆகியவை அவர்களுக்கு உதவும் காரணிகளாகும்.
- பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடும் திறன் அவர்களுக்கு ஒரு சுதந்திரத்தை அளிக்கிறது. இந்த தனிப்பட்ட அல்லது குழு நடவடிக்கைகள் மெய்நிகர் அல்லது வெளியக நடவடிக்கையாக இருக்கலாம்.
- அவசரகால பதிலளிப்பு சேவைகள், வெளியேற்றும் செயல்முறை மற்றும் அறிக்கையிடல் வழிமுறைகள் பற்றிய அறிவு, அவசர காலங்களில் அவர்களுக்கு சுதந்திரத்தை வழங்குகிறது.
- திறன்பேசிகள் (ஸ்மார்ட் கைபேசி), தரவு மற்றும் மென்பொருள் செயலிகள் போன்றவற்றின் பயன்பாடுகளின் மலிவு, இணைப்பு சிக்கல்கள் மற்றும் உதவி சாதன தொழில்நுட்பம் குறித்த குறைந்த விழிப்புணர்வு ஆகியவை உதவி தொழில்நுட்ப பயன்பாட்டிற்கான முக்கிய தடைகளாகும்.

பின்னணி

வரைவிலக்கணங்கள் மற்றும் கருத்துக்கள்

குறைபாடு :உடல்நல அனுபவத்தின் பின்னணியில், குறைபாடு என்பது ஏதேனும் உளவியல் அல்லது உடற்கூறியல் அமைப்பு அல்லது செயல்பாட்டினது இழப்பு அல்லது அசாதாரணமானது

இயலாமை :ஒரு உடல்நல அனுபவத்தின் பின்னணியில், இயலாமை என்பது ஒரு மனிதனுக்கு இயல்பாக சாதாரணமாக கருதப்படும் விதத்தின் வரம்பிற்குள் ஒரு செயலைச் செய்யும் திறனின் குறைபாட்டின் விளைவாக எந்தவொரு கட்டுப்பாடு அல்லது பற்றாக்குறையாகும்

ஆதாரம்: குறைபாடுகள், இயலாமைகள் மற்றும் ஊனமுற்றோர் சர்வதேச வகைப்பாடு (ஜெனீவா,டப்லியு.எச்.ஒ 1980 மற்றும் 1993)

மேற்கூறிய வரைவிலக்கணங்கள் மீதான விமர்சனங்கள்: மருத்துவரீதியின் மையமாகவே அதிக கவனம் செலுத்துதல், உடல் ரீதியான குறைபாடுகளில் அதிக கவனம் செலுத்துதல், இயலாமையின் சமூக அம்சங்களுக்கு போதுமான உணர்திறன் இல்லை.

செயல்பாடு, இயலாமை மற்றும் சுகாதாரம் (ஐ.சி.எவ்) மாதிரியின் சர்வதேச வகைப்பாடு;

இது உடல் அல்லது உளவியல் இழப்பு அல்லது தனிநபர்களின் இயல்புக்கு மாறானவற்றின் மீது அல்லாமல்; நடவடிக்கைகள்/பங்கேற்பு நிலை மற்றும் உடல் செயல்பாடுகள்/உடல் அமைப்பு நிலை ஆகிய இரண்டிலும் மனித செயல்பாட்டில் நடுநிலையான தொடக்கப் புள்ளியை எடுக்கும். மேலும் மாதிரியில் பல 'நுழைவுப் புள்ளிகள்' உள்ளன, இது இயலாமையின் மருத்துவ மற்றும் சமூக அம்சங்களையும், சுற்றுச்சூழல் மற்றும் தனிப்பட்ட காரணிகளையும் உள்ளடக்கியது.

ஆதாரம்: https://www.who.int/classifications/icf/en/

ஐ.சி.எவ் மாதிரியானது மருத்துவ மற்றும் சமூக மாதிரிகளை ஒருங்கிணைக்கிறது



உடல் செயல்பாடுகள் உடல் அமைப்புகளின் உடலியல் மற்றும் உளவியல் செயல்பாடுகளாகும், **உடல் கட்டமைப்புகள்** என்பது உறுப்புகள், மூட்டுகள் மற்றும் அவற்றின் கூறுகள் போன்ற உடலின் உடற்கூறியல் பாகங்கள் ஆகும். குறைபாடுகள் என்பது குறிப்பிடத்தக்க திரிபுகள் அல்லது இழப்பு போன்ற உடல் செயல்பாடு அல்லது கட்டமைப்பில் உள்ள சிக்கல்களாகும், **செயல்பாடு** என்பது ஒரு தனிநபரின் பணி அல்லது செயலை நிறைவேற்றுவது, **பங்கேற்பது** ஒரு வாழ்க்கை சூழ்நிலையில் ஈடுபடுவதாகும், செயல்பாட்டு வரம்புகள் செயல்பாடுகளை செயல்படுத்துவதில் ஒரு நபருக்கு ஏற்படக்கூடிய சிரமங்கள், பங்கேற்பு கட்டுப்பாடுகள் ஒரு நபர் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் ஈடுபடும் போது ஏற்படும் பிரச்சனைகள். **சுற்றுச்சூழல் காரணிகள்** மக்கள் வாழும் மற்றும் அவர்களின் வாழ்க்கையை நடத்தும் உடல், சமூக மற்றும் மனப்பான்மை சூழலை உள்ளடங்கும். பரந்த மாறுபாடு காரணமாக **தனிப்பட்ட காரணிகள்** குறிப்பாக குறியிடப்படவில்லை.

ஆதாரம்: https://www.who.int/classifications/icf/icfbeginnersguide.pdf

மியான்மாரிலுள்ள இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுடன் லர்ன்ஏஷியாவின் ஈடுபாடு

இயலாமைகள் மற்றும் உதவி சாதன தொழில்நுட்பங்கள் குறித்த லர்ன்ஏஷியாவின் ஈடுபாடுகள் 2015 ஆம் ஆண்டு இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்கள் (பி.டப்லியு.டி) பற்றிய எங்கள் முதல் ஆய்வை மியான்மாரில் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டின் அணுகல் சவால்களைப் புரிந்து கொள்ள மேற்கொண்டபோது தொடங்கியது. இயலாமைகளைக் கொண்டுள்ளோரின் அமைப்புகளுடன் (டி.பி.ஓ கள்), மற்றும் மியான்மார் சுயாதீன வாழ்க்கையின் முன்முயற்சி (எம்.ஐ.எல்.ஐ) மற்றும் மியான்மார் அபிவிருத்தி நிறுவனத்திற்கான தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் (எம்.ஐ.டி.ஒ) ஆகியவற்றுடன் இணைந்து, லர்ன்ஏஷியா இந்த பிரச்சனைகளுக்கான கொள்கை மற்றும் நடைமுறை தீர்வுகளை அடையாளம் கண்டுள்ளது, குறிப்பாக மியான்மாரின் விரைவான திறன்பேசி / ஸ்மார்ட் கைப்பேசிகள் பாவனை நடவடிக்கையால் செயல்படுத்தப்பட்ட தீர்வுகளாகும். இந்தப் பரிந்துரைகள் மியான்மார் ஒன்றிய நாடாளுமன்றத்தைச் சேர்ந்த 23 நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாங்கூன் பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் ஊடகங்களுக்கு பரவலாகப் பரப்பப்பட்டன.



நேபாளத்திலுள்ள இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுடன் லர்ன்ஏஷியாவின் ஈடுபாடு

நாங்கள் நேபாளத்தில், 2004 ஆம் ஆண்டு முதல் ஆராய்ச்சி, திறன்களை கட்டியெழுப்பி, ஒழுங்குமுறை மற்றும் கொள்கை பரிந்துரைகளை வழங்கியுள்ளோம். இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு நட்பான கொள்கைகள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப தீர்வுகள் குறித்த ஒரு பட்டறையானது 2018 இல் நடத்தப்பட்டது. இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் பற்றிய தேசிய அளவிலான பிரதிநிதித்துவ (அளவறி) கணக்கெடுப்பு, இது அவர்களின் அனுபவங்களை ஆராய்ந்ததோடு, இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் வகைகள், இயலாமை, தடைகள் மற்றும் கல்வி, போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான பிற மாறிகளுடன் எண்ணளவிடப்பட்டது; மற்றும் பேச்சு/செவித்திறன் இயலாமைகள் உள்ளவர்களுக்கு உதவக்கூடிய இரண்டு கையடக்க மென்பொருள் செயலி பயன்பாட்டுக்கு ஹேக்கத்தன் பலனளித்தது . பண்பறி ஆய்வானது, 4 மாகாணங்களில் 200 பதிலளித்தவர்களுடன் நேர்காணல் நடத்தப்பட்டது. சட்டம் மற்றும் தொழில்நுட்ப மையம் மற்றும் நேபாளத்தின் இணையத்தள சமூகம் ஆகியவற்றுடன் பணிபுரியும் லர்ன்ஏஷியா; மே 2019 இல் நேபாளத்தில் முக்கிய கொள்கைப் பங்குதாரர்களுடனான எங்கள் ஈடுபாட்டிற்கு ஆதரவாக எட்டு வெள்ளை ஆவணங்களை வெளியிடுவதன் மூலம் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் சுயாதீனமான வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான எளிய, உடனடியாக செயல்படக்கூடிய வழிகளை முன்மொழிந்தது.

இந்தியாவிலுள்ள இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுடன் லர்ன்ஏஷியாவின் ஈடுபாடு

இந்தியாவின் விஹர புத்தாக்கம் வலையமைப்புடன் இணைந்து தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினால் (ஐ.சி.டி) எவ்வாறு இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு சுயாதீனமான வாழ்விற்கு வழிவகுக்கும் என்பதை மதிப்பிடுவதற்கு லர்ன்ஏஷியா ஒரு பண்பறி ஆராய்ச்சியை கருத்துருவாக்கியது. பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள, பார்வை குறைபாடுள்ள மற்றும் நடமாடுதல் குறைபாடுள்ள பிரிவுகள் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் சேர்க்கப்பட்டுள்ளன. விஹர புத்தாக்கம் வலையமைப்புடன் லர்ன்ஏஷியா, இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கான தேவை அடிப்படையிலான கண்டுபிடிப்புகள் மற்றும் உதவி சாதன தொழில்நுட்ப தீர்வுகளை செயல்படுத்த 'முன்-துரிதப்படுத்தி திட்டத்தை' நடத்தியது. இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் தேவைகளில் முக்கியமான இடைவெளிகளைக் கண்டறிய ஆராய்ச்சி முடிவுகள் பயன்படுத்தப்பட்டன.

பெண் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஆண்களை விட அதிகமாக உள்ளது; இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் மத்தியில் திறன்பேசி/ஸ்மார்ட் கைப்பேசி பயன்பாடு பொது மக்களை விட குறைவாக உள்ளது

இலங்கையில் இயலாமைகளைக் கொண்டுள்ள மக்கள்

- ஆவ்டர் அக்சஸ் ஆராய்ச்சியின் படி[1], இலங்கையில் 15-65 வயதுடைய இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் (பி.டப்லியு.டி) எண்ணிக்கை சுமார் 570,000 ஆகும். வயது பிரிவில் இது 4% மக்கள்தொகையாகும். 2012 இலங்கை மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி[2] அனைத்து வயதினரும் (மொத்த மக்கள் தொகையில் 8%) இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 1,617,924 ஆகும். செயல்பாட்டு இயலாமைகள் பற்றிய தகவல்கள் மக்கள்தொகை கணக்கெடுப்பு அறிக்கையில் ஆறு களங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன; அதாவது பார்ப்பது, நடப்பது, கேட்டல், அறிவாற்றல், சுய-பராமரிப்பு மற்றும் தொடர்பாடல். இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் மக்கள்தொகையில் 57% பெண்களாகவும் மற்றும் அவர்களின் நடமாடல் இயக்கம் மற்றும் பார்வை இயலாமைகள் ஆண்களை விட கணிசமாக அதிகமாகும். 453,091 இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டுமே பொருளாதார ரீதியாக சுறுசுறுப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளனர், மற்றவர்கள் இயலாமைகள் மற்றும் முதுமை காரணமாகச் சார்ந்து தங்கியுள்ளனர்.

கையடக்க தொலைப்பேசி உரிமைத்துவம்

- ஆவ்டர் அக்சஸ் பொது ஆய்வு[1] 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் 15-65 வயதுடைய சனத்தொகையில் 78% பேர் கையடக்கத் தொலைபேசியை வைத்திருந்தனர். இந்த கையடக்கத் தொலைபேசிகளில் நாற்பத்தேழு வீதமானவை திறன்பேசி/ஸ்மார்ட் கையடக்க தொலைப்பேசிகளாகும், ஏனையவை தனிச்சிறப்பு தொலைபேசிகள் (வரையறுக்கப்பட்ட இணையத் திறன்) அல்லது அடிப்படைத் தொலைபேசிகள் (இணைய வசதி இல்லை).

- 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் 15-65 வயதுடைய இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் 32% பேர் கையடக்கத் தொலைபேசியை வைத்திருந்ததாக ஆவ்டர் அக்சஸ் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. இந்த கையடக்கத் தொலைபேசிகளில் இருபத்தைந்து சதவீதம் திறன்பேசி/ஸ்மார்ட் கையடக்க தொலைப்பேசிகளாகும், ஏனையவை தனிச்சிறப்பு தொலைபேசிகள் (வரையறுக்கப்பட்ட இணையத் திறன்) அல்லது அடிப்படை தொலைபேசிகள் (இணைய வசதி இல்லை).

1. https://lirneasia.net/2019/05/afteraccess-asia-report3/
2. https://203.94.94.89/mainsite/Population/StaticalInformation/CPH2011/CensusPopulationHousing2012-FinalReport

செயல்பாட்டு இயலாமைகளின் அதிக விகிதம் கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளது, குறைந்த விகிதம் கொழும்பு மாவட்டத்தில் உள்ளது

மாவட்டம்	இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் விகிதம் 1000 நபர்களுக்கு	மாவட்டம்	இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் விகிதம் 1000 நபர்களுக்கு
கண்டி	101	மாத்தளை	89
நுவரெலியா	100	காலி	87
ரத்தினபுரி	100	களுத்துறை	87
யாழ்ப்பாணம்*	96	அனுராதபுரம்	86
திருகோணமலை	95	முல்லைத்தீவு	86
பதுளை	94	கிளிநொச்சி	84
குருநாகல்	94	வவுனியா	84
ஹம்பாந்தோட்டை	93	மாத்தறை	83
புத்தளம்	92	மன்னார்	82
கேகாலை	92	கம்பஹா	77
மொனராகலை*	92	கொழும்பு*	70
பொலன்னறுவை	90	**மொத்தம்**	**87**

* தரவு சேகரிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள்

ஆதாரம்: http://203.94.94.89/mainsite/Population/StaticalInformation/CPH2011/CensusPopulationHousing2012-FinalReport

இலங்கை தொடர்பான குறிப்பிட்ட பிரச்சினைகள்

- துல்லியமான எண்ணிக்கை நிச்சயமற்றதாக இருந்தாலும், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்தில் வசிப்பவர்கள் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டுப் போரின் காரணமாக உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களாக உள்ளனர். போரினால் பாதிக்கப்பட்டவர்கள், காயமடைந்த போராளிகள் மற்றும் கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிந்தைய அதிர்ச்சிகரமான உணர்ச்சிகளைத் தீர்க்க தலையீடுகள் தேவை.
- பெரும்பாலான ஆராய்ச்சிகள் போருக்குப் பிந்தைய நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி முயற்சிகளில் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் உள்ளடங்கலான சேர்க்கையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்கின்றன.
- 2004 இல் சுனாமி போன்ற இயற்கை பேரழிவுகள் முதன்மையாக நாட்டின் தென்கிழக்கு பிராந்தியத்தில் வசிப்பவர்கள் பலரை உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களாக ஆக்கியது.

"இயலாமைகளைக் கொண்டுள்ள உடலின் நிலையான அடையாளம் சமூகத்தில் உள்ள பெரும்பாலான திறன்கொண்டவர்களுக்கு அறத்திற்கு ஆதாரமாக மாறியுள்ளது, அதன் மூலம் அவர்களைப் பராமரிக்க ஊக்குவித்து இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் உயிர்வாழ்வதற்கு தேவைகளான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் பலவற்றை; அதேநேரத்தில்மனிதர்களாக இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களின் பெரும்பாலான சிவில் உரிமைகளை புறக்கணித்தலுக்கும் குறைமதிப்பிற்கும் உட்படுத்துகின்றது.. இவ்வாறு, மேற்கூறிய கட்டுமானமானது இயலாமைகளைக் கொண்டுள்ளோர் சார்ந்து இருப்பவர்கள் என்ற அடையாளத்தை வலுப்படுத்துகிறது…. இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களை கவனித்துக்கொள்வதற்கான சமூகப் பொறுப்பை, தொண்டு அணுகுமுறை அதிகரிக்கிறது என்றாலும்; கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் அன்றாட வாழ்வின் பல களங்களுக்கு சமமான அணுகலை மறுக்கிறது."
– லியனகே சி. (உள்ளடங்கல், இயலாமை மற்றும் கலாச்சாரம், உள்ளடங்கலலான கற்றல்மற்றும் கல்வி சமபங்கு)

இலங்கையில் சட்டங்கள் மற்றும் கொள்கைகள்



இலங்கை அரசாங்கம் 2007 இல் ஐக்கிய நாடுகளின் இயலாமைகளுள்ள நபர்களின் உரிமைகள் தொடர்பான மாநாட்டில் (யு.என்.சி.ஆர்.பி.டி) கையொப்பமிட்டது மற்றும் 2016 இல் அங்கீகரிக்கப்பட்டது. அவர்களின் உரிமைகளை மீறியதற்காக பரிகாரம் மறுக்கப்படும் போது இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் உரிமைகள் பற்றிய செயற்குழுவுடன் தொடர்புகொள்வதற்கு எந்தவொரு தனிநபர் அல்லது தனிநபர் குழுவையும் வழங்கும் விருப்பு நெறிமுறையை இன்னும் ஏற்க வேண்டும்.

இலங்கையில் சட்டங்கள் மற்றும் கொள்கைகள்

இயலாமைகள் உரிமைகள் மசோதா (2006)	பாரபட்சமில்லாத உரிமைகள், முடிவெடுப்பதில் பங்கேற்பு, வேலைவாய்ப்பு, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் மேம்பாடு, வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம், விளையாட்டு, போக்குவரத்து, கட்டப்பட்ட சுற்றுச்சூழல், வீடமைப்பு, சமூக பாதுகாப்பு, தொடர்பாடல் மற்றும் தகவல், உதவி சாதனங்கள், குடும்பம் மற்றும் சமூக வாழ்க்கை மற்றும் குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் இயலாமைகள் உள்ள முதியவர்கள் போன்றோரின் உரிமைகள் ஆகியவை அடங்கும்.
இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களின் அணுகல் ஒழுங்குமுறை எண். 01 (2006)	அனைத்து புதிய கட்டுமானங்கள், புனரமைப்புகள் மற்றும் பொது கட்டிடங்களின் மாற்றங்கள் மற்றும் போக்குவரத்து அணுகல் தன்மைக்கு ஏற்ப இணக்க வழிகாட்டுதல்கள் மற்றும் தற்போதுள்ள அனைத்து பொது கட்டிடங்களும் மூன்று ஆண்டுகளுக்குள் அணுகக்கூடியதாக மாற்ற வேண்டும்.
தேசிய இயலாமைகள் கொள்கை (2003)	இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களுக்கான பிரதான கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட சேவைகளை உள்ளடக்கியது.
ரணவிரு சேவா சட்டம் (1999)	கடமையில் ஈடுபடும்போது இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களான ஆயுதப்படை மற்றும் காவல்துறை உறுப்பினர்களின் பராமரிப்பு மற்றும் மறுவாழ்வுக்காக வழங்குகிறது; அத்தோடு அவர்களையும் மற்றும் கொல்லப்பட்ட அல்லது காணாமல் போனவர்களை சார்ந்து இருப்போரின் நலனை மேம்படுத்துகிறது.
சிறப்புக் கல்விச் சங்கம் (ஒருங்கிணைப்பு) சட்டம் எண். 3 (1999)	இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களின் மறுவாழ்வு, கல்விச் சேவைகளை வழங்குதல் மற்றும் சமூக சேவைகளில் அவர்களை ஈடுபடுத்துதல், மானியங்கள் வழங்குதல், இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி மற்றும் ஆதரவுகள் வழங்குதல், இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களுக்கு ஊட்டச்சத்தான உணவு, மருத்துவ வசதிகள், தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பை வழங்குதல்.
பொதுக் கல்வி சீர்திருத்தங்கள் (1997)	இயலாமைகளைக் கொண்டுள்ள குழந்தைகளை சாதாரண வகுப்பறையில் உள்ளடங்கலாக சேர்த்தல்.
இயலாமைகளைக் கொண்டுள்ள உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டம் எண். 28 (1996)	இலங்கையில் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் உரிமைகளின் முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கிறது; அத்தோடு தேசிய கவுன்சில் மற்றும் இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களின் தேசிய செயலகத்தை ஸ்தாபித்தல்.
சமூக பாதுகாப்பு வாரிய சட்டம் 17 (1996)	விபத்து அல்லது முதுமையின் போது இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டு பலன்கள்.
தேசிய சுகாதாரக் கொள்கை (1996)	மறுவாழ்வில் இயலாமைகளைக் கொண்டுள்ள குழந்தைகளின் ஆரம்ப பாடசாலைகள், வீட்டுச் சந்திப்பு, உதவிச் சாதனங்கள், பெற்றோரின் ஆலோசனைகள் மற்றும் கடுமையான மற்றும் நாள்பட்ட மன நோய்களிலுள்ள குழந்தைகளுக்கான விழிப்புணர்வு உள்ளிட்ட வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஆரம்ப குழந்தைப் பருவ வளர்ச்சியை உள்ளடக்கும்.
தொழிலாளர் இழப்பீடு சட்டம் எண். 19 (1934), (1957 மற்றும் 2005 இல் திருத்தப்பட்டது)	தொழிற்பணியின் போது காயமடைந்த தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்குதல்.
பொது நிர்வாக சுற்றறிக்கை எண். 27/88 (1988)	பொது சேவைகள் மற்றும் பொது நிறுவனங்களில் 3% காலியிடங்கள் இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களால் நிரப்பப்படும்.
மனநோய் சட்டம் எண். 27 (1956)	மனநலம் குன்றிய நபர்களின் சிறந்த பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு.

ஆராய்ச்சி குறிக்கோள்கள்

- பார்வை, செவித்திறன்/பேச்சு மற்றும் நடமாடுதல் இயக்கம் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு சுயாதீனமான வாழ்க்கை* என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளல்.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஐ.சி.டி) மற்றும் கொள்கைத் தலையீடுகள் எவ்வாறு இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு சுயாதீனமான வாழ்க்கையைச் செயல்படுத்த முடியும் என்பதை மதிப்பிடுங்கள்.

**"சுயாதீனமான வாழ்க்கை என்பது சுயநிர்ணயம், சம வாய்ப்புகள் மற்றும் சுயமரியாதைக்காக உழைக்கும் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் ஒரு தத்துவம் மற்றும் இயக்கமாகும். சுயாதீனமான வாழ்க்கை என்பது இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் எல்லாவற்றையும் தாங்களாகவே செய்ய விரும்புகிறார்கள், அவர்களுக்கு யாரும் தேவையில்லை அல்லது அவர்கள் தனிமையில் வாழ விரும்புகிறார்கள் என்று அர்த்தமல்ல. இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் அதே மனவிருப்புகளையும் கட்டுப்பாட்டையும் கோருகின்றனர். இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் தங்கள் குடும்பத்துடன் வளரவும், அருகில் உள்ள பள்ளிக்குச் செல்லவும், அதே பேருந்தில் தங்கள் பக்கத்து வீட்டுக்காரர்களைப் பயன்படுத்தவும், தங்கள் கல்வி மற்றும் ஆர்வத்திற்கு ஏற்ற வேலைகளில் பணியாற்றவும், சொந்தமாக குடும்பங்களைத் தொடங்கவும் விரும்புகிறார்கள்" (அடால்வ் ராட்ஸ்கர்)*

செயல்முறை

ஆராய்ச்சி ஆலோசனை குழு மற்றும் ஆராய்ச்சி நெறிமுறைகள் அனுமதி ஒப்புதல்

இயலாமை ஆராய்ச்சி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

- திருமதி. துசிதா பெரேரா (தவிசாளர்), நிறைவேற்றுப் பணிப்பாளர், கம்சோ ஆசிய பகிர்வு சேவைகள் (கம்சோ ஏஷியா ஷேர்ட் சர்வீசஸ்)
- திருமதி. மனிக் குணரத்ன, முகாமையாளர் - விசேட பயிற்சி மற்றும் இயலாமை வள நிலையம், இலங்கை தொழிலாளர்கள் சம்மேளனம்
- டாக்டர். அஜித் சி.எஸ். பெரேரா, இயலாமை உரிமை ஆர்வலர், நிறுவனர்/தலைமை நிர்வாக அதிகாரி - இதிரிய
- திருமதி. குலானி அபென்ட்ரோத் - டயஸ், நடத்தை விஞ்ஞானி
- திருமதி நெவிந்தரி பிரேமரத்ன, செயல் திட்ட முகாமையாளர், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர்

ஆலோசனைக் குழு ஆலோசனையில் பின்வருவன அடங்கும்:

- ஆராய்ச்சி கருவிகளில் உள்ளீட்டை வழங்கல்
- ஆராய்ச்சி முடிவுகள் பற்றிய கருத்துக்களை வழங்கல்
- ஆராய்ச்சி மூலம் அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை கிரகித்தல்
- கொள்கை விளக்கங்களில் உள்ளீட்டை வழங்கல்

2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதுகலைப் பட்டதாரி மருத்துவ நிறுவனம் (கொழும்புப் பல்கலைக்கழகம்) நெறிமுறைகள் மறுஆய்வுக் குழுவால் இந்த ஆராய்ச்சி செயல்முறை அங்கீகரிக்கப்பட்டது.

ஆராய்ச்சிக் குழு பட்டறை

களப்பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களையும், களப்பணிக்கான தயாரிப்பில் பின்வருவனவற்றை உறுதி செய்ய பயிற்சி பட்டறையை நடாத்தப்பட்டது;

- பரந்த செயல் திட்ட இலக்குகளுக்கு ஆராய்ச்சி எவ்வாறு பொருந்தும் என்பதைப் பற்றிய புரிதல் இருந்தது;
- பண்பறி ஆராய்ச்சியை மேற்கொள்ளும்போது சிறந்த நடைமுறைகள், குறிப்பாக நெறிமுறைக் கருத்தாய்வுகள் பற்றி அறிந்திருந்தனர்.

பயிற்சிப் பட்டறை செப்டம்பர் 2019 இல் கூட்டப்பட்டது, நிகழ்ச்சியின் முதல் இரண்டு நாட்கள் லர்ன்ஏஷியா வளாகத்தில் நடைபெற்றது. மூன்றாம் நாள், பரீட்சை மற்றும் விளக்கமளிக்கும் அமர்வு ஆகியவை கொழும்பில் மிகவும் அணுகல் வாய்ந்த இடத்தில் நடைபெற்றது.

தரவு சேகரிப்பு செயல்முறை

- இலங்கையின் மேற்கு, மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற இடங்களில் 15 மற்றும் 65 வயதுக்கு இடைப்பட்ட நடமாடுதல் இயக்கம், பார்வை மற்றும் செவித்திறன்/பேச்சு இயலாமைகள் உள்ளவர்களை ஆய்வு செய்ய பண்பறி ஆராய்ச்சி முறைகள் பயன்படுத்தப்பட்டன. 2019 அக்டோபர் முதல் டிசம்பர் வரை களப்பணிகள் நடத்தப்பட்டன.

- பதிலளிப்பவர்களின் அன்றாட வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்காக இலக்கு கவனம் இனப்பரப்பு விளக்கவியல்கள் (எவ்.இ) நடத்தப்பட்டது. ஆராய்ச்சியாளர் வீட்டுச் சுற்றுச் சூழலைக் கவனித்து, பதிலளித்தவரைப் பொது இடத்தில் நிழலாக தொடர்ந்தார். இரண்டு ஈடுபாடுகளிலும், இயலாமைகளுள்ளவர்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் சவால்களைப் புரிந்துகொள்ள ஆராய்ச்சியாளர் முயற்சித்தார்.

- அரை-கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல் வழிகாட்டியைப் பயன்படுத்தி இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுடன் ஆழமான-நேர்காணல்கள் (ஐ.டி.ஐ) நடத்தப்பட்டன. கலந்துரையாடல்கள் வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் பதிலளித்தவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சுற்றியே இருந்தன. நேருக்கு-நேர் சந்திப்புகள் ஆராய்ச்சியாளரை சில கருப்பொருள்களை ஆழமாக ஆராய அனுமதித்தன.

- குழு கலந்துரையாடல்களில் வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் வெளிப்புற சூழலில் உள்ள சவால்களை ஆராய்வதற்காக அவர்கள் இலக்கு கவனக் குழு கலந்துரையாடல்கள் (எவ்.ஜி.டி) நடத்தப்பட்டன. இயலாமை வகை, சமூக-பொருளாதார வகைப்பாடு, வயது மற்றும் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் குழுக்கள் பிரிக்கப்பட்டன.

- தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அதிகாரிகள், ஆர்வலர்கள், கல்வியாளர்கள் மற்றும் தனியார் துறைப் பிரதிநிதிகளுடன் முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள் (கே.ஐ.ஐ) மூலம் விசாரிப்பு பகுதியில் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் இயலாமைகள் துறையில் அவர்களின் அனுபவங்களைப் புரிந்து கொள்ள நடத்தப்பட்டன.

- (எவ்.இ), (எவ்.ஜி.டி) அல்லது (ஐ.டி.ஐ) யைத் ஆரம்பிப்பதற்கு முன் அனைத்து பங்கேற்பாளர்களிடமிருந்தும் எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் பெறப்பட்டது. நெறிமுறை அனுமதி சமர்ப்பிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றுமாறு மதிப்பீட்டாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

- அணுகல் மற்றும் சௌகரீயம் போன்ற பதிலளிப்பவர்களின் தேவைகளின் அடிப்படையில் கலந்துரையாடல் இடங்கள் மற்றும் நேரங்கள் தீர்மானிக்கப்பட்டன. எனவே, பெரும்பாலான நெறிமுறைகளுக்கு, மதிப்பீட்டாளர் மற்றும் கள மேற்பார்வையாளர்கள் பதிலளித்தவர்களின் இருப்பிடங்களுக்குச் சென்றனர். அனைத்து கலந்துரையாடல்களும் நேர்காணல்களும் கலந்துரையாடல் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான கருப்பொருள்களை உள்ளடக்கியது.

இடங்கள் மற்றும் மாதிரி

இணையத்தளம் மற்றும் சமூக ஊடக பயனர்கள்	மாகாணம்			நெறிமுறைகள் மொத்த எண்ணிக்கை	பதிலளித்தவர்கள் மொத்த எண்ணிக்கை
	மேற்கு	ஊவா	வடக்கு		
இலக்கு கவனக் குழு கலந்துரையாடல் (எவ்.ஜி.டி கள்)	5	4	4	**13**	**76**
ஆழமான-நேர்காணல் (ஐ.டி.ஐ கள்)	3	5	2	**10**	**10**
இலக்கு கவனம் இனப்பரப்பு விளக்கவியல்கள் (எவ்.இ)	7	4	4	**15**	**15**

பாலினம்	#
பெண்	53
ஆண்	48
மொத்தம்	**101**

இயலாமை	#
நடமாடுதல் இயக்கம்	30
பார்வை	42
கேட்டல்/பேச்சு	29
மொத்தம்	**101**

வயது குழு	#
15-20	14
21-35	33
36-45	28
46-65	26
மொத்தம்	**101**

தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்	#
பயனர்	80
பயன்படுத்தாதவர்	21
மொத்தம்	**101**

ஆய்வு ஆராய்ச்சி இடங்கள் - மேல் மாகாணம்

மக்கள்தொகை பரவல்

- கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணமானது, இலங்கையின் சமூக பொருளாதார ரீதியாக மிகவும் அபிவிருத்தியடைந்த பிரதேசமாகும். இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 38.5 சதவீத பங்களிப்பை வழங்குகிறது.

- 2012 மக்கள்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பின்படி[3], இலங்கை சனத்தொகையில் 28.7% (5,851,130) மேல் மாகாணத்தில் வாழ்ந்தனர். ஒட்டுமொத்த மாகாணத்தின் மக்கள் தொகையில், 2,324,349 (39.7%) கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட மக்கள் தொகை முறையே 2,304,833 (39.4%) மற்றும் 1,221,948 (20.9%) ஆகும்.

நகர்ப்புற-கிராமப்புற/நாட்டுப்புற மக்கள் தொகை பரவல்

- மேல் மாகாணத்தில் பெரும்பான்மையான மக்கள் நாட்டுப்புறங்களில் வாழ்கின்றனர். இருப்பினும், மாவட்டங்களுக்குள் பரப்பளவில் மக்கள்தொகைப் பரவலானது வேறுபட்ட வடிவத்தைக் காட்டுகிறது. கொழும்பு மாவட்டத்தில் பெரும்பான்மையான மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர் அதே நேரத்தில் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பெரும்பான்மையானவர்கள் கிராம/நாட்டுப்புறங்களில் வாழ்கின்றனர்.

- மேல் மாகாணத்தில் தோட்டத் துறை சனத்தொகை வீதம் மொத்த சனத்தொகையில் 0.8 வீதமேயாகும். களுத்துறை மாவட்டம் தோட்ட சனத்தொகையின் அதிகூடிய சதவீதத்தை (3.1%) பதிவு செய்துள்ளது. கம்பஹா மாவட்டத்தில் மொத்த சனத்தொகையில் 0.1 வீதமே தோட்டத் துறை சனத்தொகையாகும்.

பாலினத்தின் அடிப்படையில் மக்கள்தொகை பரவல்

- மொத்த மக்கள்தொகையில், 2,848,649 (48.7%) ஆண்கள் மற்றும் 3,002,481 (51.3%) பெண்கள்.

இனவாரியாக மக்கள்தொகைப் பரவல்

- மாகாணத்தில் பெரும்பான்மையான மக்கள் சிங்களவர்கள் (84.2%). இரண்டாவது மிக உயர்ந்த இனக்குழு இலங்கை மூர்ஸ்/முஸ்லிம்கள் (7.9%) தமிழர்கள் (6.8%) மற்றும் ஏனைய இனக்குழுக்கள் 1.2 சதவீதம்.

மாவட்டங்களில் இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்கள் விகிதம்

- மேல் மாகாணத்தில் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் அதிக விகிதம் களுத்துறை மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளது, அதைத் தொடர்ந்து கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்கள் உள்ளன.

பாலினத்தின் அடிப்படையில் கணினி கல்வியறிவு

- மாகாணத்தில் 10 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மக்களின் கணினி கல்வியறிவு 32.9 சதவீதமாக உள்ளது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தொடர்புடைய சதவீதம் முறையே 36.3 மற்றும் 29.7 சதவீதம் ஆகும்.

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_images/press_20190925_Provincial_Gross_Domestic_Product_-_2018_e.pdf

http://203.94.94.89/mainsite/Population/StaticalInformation/CPH2011/CensusPopulationHousing2012-FinalReport

http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/index.php?fileName=Activities/TentativelistofPublications

ஆய்வு ஆராய்ச்சி இடங்கள் - ஊவா மாகாணம்

மக்கள்தொகை பரவல்

- ஊவா மாகாணமானது பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களைக் உள்ளடக்கியது. இது 2018 இல் நாட்டின் மொத்த உள்நாட்டில் 5.7 சதவீத பங்களிப்பை அளித்தது. ஆண்டுக்கு-ஆண்டு அதிகரிப்பு 0.1 மட்டுமே.

- 2012 ஆம் ஆண்டு மக்கள்தொகை மற்றும் வீடமைப்புக் கணக்கெடுப்பின்படி, இலங்கையின் சனத்தொகையில் 6% (1,266,463) ஊவா மாகாணத்தில் வாழ்ந்துள்ளனர். மாகாணத்தின் மொத்த சனத்தொகையில், 815,405 (64.38%) பேர் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மொனராகலை மாவட்ட மக்கள் தொகை 451,058 (35.62%).

நகர்ப்புற-கிராமப்புற/நாட்டுப்புற மக்கள் தொகை பரவல்

- ஊவா மாகாணத்தில் பெரும்பான்மையான மக்கள் கிராம/நாட்டுப்புறங்களில் வாழ்கின்றனர், இது 77.4% ஆகும். பதுளை மாவட்டத்தில் நகர்ப்புற மக்கள் தொகை 66,405 ஆக உள்ளது, மொனராகலை மாவட்டத்தில் நகர்ப்புற பகுதிகள் இல்லை.

- ஊவா மாகாணத்தில் தோட்டத் துறை சனத்தொகை வீதம் மொத்த சனத்தொகையில் 12.8 வீதமேயாகும். பதுளை மாவட்டம் பெருந்தோட்ட சனத்தொகையின் அதிகூடிய சதவீதத்தை பதிவு செய்துள்ளது (18.9 %). மொனராகலை மாவட்டத்தில், மொத்த சனத்தொகையில் தோட்டத் துறையின் சனத்தொகை 1.9 வீதமேயாகும்.

பாலினத்தின் அடிப்படையில் மக்கள்தொகை பரவல்

- மொத்த மக்கள்தொகையில், 616,116 (48.6%) ஆண்கள் மற்றும் 650,347 (51.4%) பெண்கள்.

இனவாரியாக மக்கள்தொகைப் பரவல்

- மாகாணத்தில் பெரும்பான்மையான மக்கள் சிங்களவர்கள் (80.8%). இரண்டாவது மிக உயர்ந்த இனக்குழுவானது தமிழ் (14.7%) தொடர்ந்து இலங்கை மூர்ஸ்/முஸ்லிம்கள் (4.3%) மற்றும் ஏனைய இனக்குழுக்கள் 0.3 வீதமாகும்.

மாவட்டங்களில் இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்கள் விகிதம்

- ஊவா மாகாணத்தில் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் அதிக விகிதம் பதுளை மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளது, அதைத் தொடர்ந்து மொனராகலை மாவட்டம் உள்ளது.

பாலினத்தின் அடிப்படையில் கணினி கல்வியறிவு

- மாகாணத்தில் 10 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மக்களின் கணினி கல்வியறிவு 17.6 சதவீதமாக உள்ளது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தொடர்புடைய சதவீதம் முறையே 18.3 மற்றும் 17 சதவீதம் ஆகும்.

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_images/press_20190925_Provincial_Gross_Domestic_Product_-_2018_e.pdf

http://203.94.94.89/mainsite/Population/StaticalInformation/CPH2011/CensusPopulationHousing2012-FinalReport

http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/index.php?fileName=Activities/TentativelistofPublications

ஆய்வு ஆராய்ச்சி இடங்கள் - வடக்கு மாகாணம்

மக்கள்தொகை பரவல்

- யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய வட மாகாணமானது, இலங்கையில் 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட மாகாணங்களில் ஒன்றாகும். போர் முடிவடைந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 4.1 சதவீதத்தை மட்டுமே வழங்குகிறது.

- 2012 மக்கள்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பின்படி, இலங்கையின் சனத்தொகையில் 5% (1,061,315) வட மாகாணத்தில் வாழ்ந்தனர். மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் அரைபங்கிற்கும் மேற்பட்டவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் 583,882 பேர் வாழ்கின்றனர். இரண்டாவது அதிகபட்சமாக வவுனியா மாவட்டத்தில் பதிவாகியுள்ளது (16.2%). கிளிநொச்சி மாவட்டத்தில் (10.7%) ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சனத்தொகை பதிவாகியுள்ளது.

நகர்ப்புற-கிராமப்புற/நாட்டுப்புற மக்கள் தொகை பரவல்

- வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான மக்கள் கிராம/நாட்டுப்புறங்களில் வாழ்கின்றனர். யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நகர்ப்புற மக்கள் தொகை கிட்டத்தட்ட சமமாக உள்ளது (20.1% மற்றும் 20.2%). முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கிட்டத்தட்ட அனைத்து மக்களும் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்த மாகாணத்தில் தோட்டத் துறை இல்லை.

பாலினத்தின் அடிப்படையில் மக்கள்தொகை பரவல்

- மொத்த மக்கள்தொகையில், 510,760 (48.1%) ஆண்கள் மற்றும் 550,555 (51.9%) பெண்கள்.

இனவாரியாக மக்கள்தொகைப் பரவல்

- மாகாணத்தில் பெரும்பான்மையான மக்கள் தமிழர்கள் (93.8%). இரண்டாவது மிக உயர்ந்த இனக்குழு இலங்கை மூர்ஸ்/முஸ்லிம்கள் (3.1%) மற்றும் சிங்களவர்கள் (3.0%) மற்றும் ஏனைய இனக்குழுக்கள் 0.1 சதவீதம்.

மாவட்டங்களில் இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்கள் விகிதம்

- இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் அதிக விகிதங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்தும், அதைத் தொடர்ந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் இருந்தும் பதிவாகியுள்ளது.

பாலினத்தின் அடிப்படையில் கணினி கல்வியறிவு

- மாகாணத்தில் 10 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மக்களின் கணினி கல்வியறிவு 19.5 சதவீதமாக உள்ளது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தொடர்புடைய சதவீதம் முறையே 20.4 மற்றும் 18.6 சதவீதம் ஆகும்.

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_images/press_20190925_Provincial_Gross_Domestic_Product_-_2018_e.pdf

http://203.94.94.89/mainsite/Population/StaticalInformation/CPH2011/CensusPopulationHousing2012-FinalReport
http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/index.php?fileName=Activities/TentativelistofPublications

பங்கேற்பாளர்களை முன்னாய்வுத் தேர்வு

- **குடிவிபரவியல் விவரக்குறிப்பு**

  வயது - 15 முதல் 65 வயது வரை

  பாலினம் - ஆண் (குறைந்தபட்சம் 40%), பெண் (குறைந்தபட்சம் 40%)

- **சமூக-பொருளாதார வகைப்பிரிவு**

  தலைமை ஊதியம் பெறுபவரின் கல்வி மற்றும் தொழிலின் அடிப்படையில் (பிரிவு – A,B,C மற்றும் D)

- **குறைபாடு வகை**

  பார்வை, செவிப்புலன்/பேச்சு, நடமாடுதல் இயக்கம் குறைபாடு

- **இயலாமை நிலை**

  பயன்படுத்திய வாஷிங்டன் குழுமத்தின் குறுகிய தொகுப்பு கேள்விகள்

- **உதவி சாதன தயாரிப்புகளின் பயன்பாடு**

  பயனர்கள் மற்றும் பயன்படுத்தாதவர்கள் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

- **திறன்பேசி/ஸ்மார்ட் கையடக்க தொலைப்பேசி பயன்பாடு**

  பயனர்கள் மற்றும் பயன்படுத்தாதவர்கள் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

கலந்துரையாடல்களில் ஆராயப்பட்டதகவல் பகுதிகள்

- இயலாமைகளுடன் வாழ்வது - வாழ்க்கை அனுபவங்கள், அன்றாட நடவடிக்கைகளில் எதிர்கொள்ளும் சவால்கள், சமாளிக்கும் வழிமுறைகள்
- பொது இடங்களுக்கு அணுகல் வசதி
- முதன்மை, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி - எதிர்கொள்ளும் சவால்கள், ஆதரவான சூழல், செயல்படுத்துவதற்கான கல்வி அமைப்பில் விரும்பிய மாற்றங்கள்
- தொழில் பயிற்சி
- தனியார் துறை மற்றும் பொதுத்துறையில் வேலைவாய்ப்பு - வேலைத்தள சுற்றுச்சூழல், வாய்ப்புகளுக்கான அணுகல், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் அதன் பலன்கள்
- சுய வேலைவாய்ப்பு
- சமூக வலைத்தளம்
- ஓய்வு/பொழுதுபோக்கு
- நலன் மற்றும் பொதுச் சேவை
- மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு
- தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பயனர் அனுபவங்கள் - கையடக்க/இணையத்தள பொதுவான பயன்பாடு, இயலாமைகள் தொடர்பான அணுகல்/பயன்படுத்தப்பட்ட மென்பொருள் செயலி, தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டிற்கான தாக்கத்தை ஏற்படுத்துபவர்கள், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டிலிருந்து பெறப்பட்ட நன்மைகள்
- இயற்கை, மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடர்களின் போது பிரதிபலிப்பதற்கு தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப ஐப் பயன்படுத்துதல்
- உதவி சாதன தயாரிப்பு பயன்பாடு - சுய சார்பு மீதான தாக்கம், உதவி சாதன தயாரிப்புகளைப் பயன்படுத்துவதற்கான ஆதரவு அமைப்பு, விழிப்புணர்வு, அணுகல் வசதி, பயன்படுத்துவதற்கான தடைகள்
- கையடக்க தொலைப்பேசி பயனர் அனுபவங்கள்

கண்டுபிடிப்புகள்

இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்களால் சுயாதீனமான வாழ்க்கை

சுயாதீனமான வாழ்க்கையின் அடையாளம் காணப்பட்ட அம்சங்களின் சுருக்கம்

தனிப்பட்ட தேவைகளை கவனித்துக்கொள்ளல்

- தனிப்பட்ட பாதுகாப்பு
- பொதுவான நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை
- தேக ஆரோக்கியம்
- சீர்ப்படுத்தல் மற்றும் சுத்தம்
- பொருத்தமான ஆடை அணிதல்

ஒரு வீட்டை நிர்வகித்தல்

- வீட்டுச் சுற்றுச்சூழலைப் பராமரித்தல்
- வீட்டுச் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப தழுவல்
- அடிப்படை உபகரணங்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்துதல்

உணவு தயாரித்தல்

- உணவு கொள்முதல்
- உணவு சேமிப்பு
- சமையல்
- பொருத்தமான உணவுப் பழக்கம்
- உணவு தயாரிக்கும் பகுதி மற்றும் பாத்திரங்களை சுத்தம் செய்தல்

பொருத்தமான ஆடைகளின் பயன்பாடு

- ஆடைகள் வாங்குதல்
- துணிகளை சேமித்தல்
- துணிகளை துவைத்தல், இஸ்திரி செய்தல் மற்றும் சரி செய்தல்

தனிப்பட்ட நிதி முகாமைத்துவம்

- பணத்தை எண்ணுதல்
- அடிப்படை நிதி பதிவுகளை வைத்திருத்தல்
- வங்கி சேவைகளைப் பயன்படுத்துதல்

சமூக விவகாரங்களில் ஈடுபடுதல்

- சாலையில் பாதுகாப்பு
- பல்வேறு போக்குவரத்து வழிகளைப் பயன்படுத்தும் திறன்
- உள்ளூரைச் சுற்றி வழிப்பாதையை தேடிக்கண்டுபிடித்தல்
- சொந்த வாகனத்தை ஓட்டுதல்
- உணவு தயாரிக்கும் பகுதி மற்றும் பாத்திரங்களை சுத்தம் செய்தல்

பொழுதுபோக்கு வசதிகளில் ஈடுபடுதல்

- கிடைக்கக்கூடிய சமூக வளங்களைப் பற்றிய அறிவு
- செயல்பாடுகளைத் தேர்ந்தெடுத்து திட்டமிடுதல்
- கூட்டாக மற்றும் தனிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

- சிவில் உரிமைகள் பற்றிய அறிவு
- அரசாங்கங்களின் இயல்புகளைப் புரிந்துகொள்ளல்
- ஜனநாயக செயல்பாட்டில் பங்கேற்பு

அவசர சேவைகள்

- அவசரகால பிரதிபலிப்பு சேவைகள் பற்றிய அறிவு
- வெளியேற்றம் மற்றும் அறிக்கை செய்தல்
- தங்குமிடம் மற்றும் மருத்துவ உதவிக்கான அணுகல் வசதி

தனிப்பட்ட தேவைகளை கவனித்தல் (1)

தனிப்பட்ட தேவைகள்: தனிப்பட்ட பாதுகாப்பு, பொதுவான நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை, தேக ஆரோக்கியம், சீர்ப்படுத்தல் மற்றும் சுத்தம், பொருத்தமான ஆடை அணிதல்

“தினமும் காலையில் நான் உடற்பயிற்சிகள் செய்கிறேன் மற்றும் மருந்து எடுத்துக்கொள்கிறேன், வெல்லஸ்ஸ அமைப்பு எனக்கு நோயைத் தடுப்பது எப்படி என்று கற்றுக் கொடுத்தது, நான் அங்குள்ள விளையாட்டுக் கழகத்தில் உறுப்பினராக இருக்கிறேன். நான் காலையில் ஒரு குவளை வெந்நீரைக் குடித்துவிட்டு வேலைக்குச் செல்வதற்கு முன் குளிக்கிறேன்”

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_நடமாடுதல்_பெண்_பயனர்_35-45_C&D

“எனது வீட்டில் உள்ள சுகாதார வசதிகளைப் பற்றி பேசினால், எனது வீட்டில் அணுகலுடனான கழிப்பறை இல்லாததால் நான் பல சிரமங்களை எதிர்கொள்கிறேன்.”

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_நடமாடுதல்_பெண்_பயனர்_35-45_C&D

ஒவ்வொருவரும் மருத்துவரை சந்திக்கும் போது ஒருவரின் உதவியை நாட வேண்டும். மருத்துவர்களுடன் தொடர்புகொள்வதற்கு அவர்கள் ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது சைகை மொழி மொழிபெயர்ப்பாளரைப் பெறுகிறார்கள். மருத்துவருடன் தொடர்பு கொள்ள முடியாததால், மருத்துவர்களிடம் இருந்து பெறும் மருந்து குறித்து அவர்களுக்கு உறுதியாக தெரியவில்லை.

மேல்_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_பயனர்_35-45_C&D

மருத்துவரைப் பார்க்கும்போது மும்மொழி சைகை மொழி அகராதியை எடுத்துச் செல்கிறார்கள். மருத்துவருடன் தொடர்புகொள்வதற்கான தொடர்புடைய சைகை மொழிப் படத்தைக் காட்டுகிறார்கள். சில நேரங்களில் மருத்துவர்கள் நோயைப் பற்றி விசாரிக்க கேள்விகளை எழுதுகிறார்கள். ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு மருத்துவர்கள் கடினமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று கூறினார்கள். அவர்களால் அறிகுறிகளை விரிவாக விவரிக்க முடியாது.

மேல்_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_பயனர்_A&B

மருத்துவச்சி வீட்டிற்கு செல்கிறார், ஆனால் அவளால் அவளுடன் சரியாக தொடர்பு கொள்ள முடியவில்லை. அவள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, அவளுடன் தங்குவதற்கு பேசக்கூடிய ஒருவரை அவள் அழைக்க வேண்டியிருந்தது. கணவன் செவிப்புலனற்றவர் எனவே அவளுடன் இருக்க முடியவில்லை.

மேல்_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_பெண்_25-45_பயனர்_A&B

தனிப்பட்ட தேவைகளை கவனித்தல் (2)

தனிப்பட்ட தேவைகள்: தனிப்பட்ட பாதுகாப்பு, பொதுவான நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை, தேக ஆரோக்கியம், சீர்ப்படுத்தல் மற்றும் சுத்தம், பொருத்தமான ஆடை அணிதல்

அவர்கள் சித்தாலேப போன்றவற்றை மருந்தகத்தில் இருந்து வாங்க வேண்டியிருக்கும் போது, அவர்கள் அதன் பெயரை எழுத வேண்டும் அல்லது பயன்படுத்திய ஒன்றைக் காட்ட வேண்டும். அந்த வணிகப்பெயர்களுக்கான அடையாளக் குறிகள் உள்ளன, ஆனால் அவற்றை மருந்தகங்களில் பயன்படுத்த முடியாது.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_25-45_பயனர்_A&B

“நான் அதிகாலையில் எழுந்து என் அத்தைக்கு சமைக்க உதவுகிறேன், பிறகு என் துணிகளை துவைக்கிறேன். நான் ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலம் தையலில் செலவு செய்கிறேன்”

ஊவா_மொனராகலை_எவ்.இ_பார்வை_பெண்_பயனர்-அல்லாதவர்_45-65_C&D

“அந்த நாட்களில் நான் டிரெட்மில் ஓட்டத்திற்காக உடற்பயிற்சியகத்திற்குச் (ஜிம்) செல்வேன். ஆனால் ஒரு நாள் டிரெட்மில்லின் வேகம் அதிகரித்தது தெரியாமல் என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் விழுந்தேன். அதன் பிறகு நான் ஜிம்மிற்கு செல்லவில்லை”

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_20-30_பயனர்_A&B

“ஒரு நாள் வீட்டை விட்டு வெளியே வரும் போது கீழே விழுந்து கால் முறிந்தது. நான் பாவாடை அணிந்திருந்ததால் வெள்ளைக் கைத்தடி மாட்டிக் கொண்டது. வெள்ளைக் கைத்தடிகளைப் பயன்படுத்தும்போது பொருத்தமான ஆடைகளை அணிய வேண்டும்”.

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_பார்வை_பெண்_பயனர்_35-45_C&D

“அந்த நாட்களில் நான் டிரெட்மில் ஓட்டத்திற்காக உடற்பயிற்சியகத்திற்குச் (ஜிம்) செல்வேன். ஆனால் ஒரு நாள் டிரெட்மில்லின் வேகம் அதிகரித்தது தெரியாமல் என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் விழுந்தேன். அதன் பிறகு நான் ஜிம்மிற்கு செல்லவில்லை”

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_20-30_பயனர்_A&B

ஒரு வீட்டை நிர்வகித்தல்

வீட்டை நிர்வகித்தல்: வீட்டுச் சுற்றுச்சூழலைப் பராமரித்தல், வீட்டுச் சுற்றுச்சூழலை மாற்றியமைத்தல், அடிப்படை உபகரணங்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்துதல்

“நான் அதிகாலையில் எழுந்து எனது எல்லா வேலைகளையும் தனியாகச் செய்கிறேன், யாருடைய உதவியையும் நான் எதிர்பார்க்கவில்லை. எல்லோருக்கும் பயன்படும் வகையில் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து வருகிறேன்”.

வடக்கு_யாழ்ப்பாணம்_எவ்.இ_பார்வை_பெண்_பயனர்-அல்லாதவர்_45-65_C&D

“பல்கலைக்கழக விரிவுரைகளில் இருந்து திரும்பிய பிறகு, நான் அதிக நேரம் தொலைக்காட்ச்சியைப் பார்ப்பேன். நான் சொந்தமாக தொலைக்காட்ச்சியை இயக்க முடியும்.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_20-30_பயனர்_A&B

"நான் மற்ற எல்லா பெண்களையும் போலவே வீட்டில் எல்லாவற்றையும் செய்கிறேன், குழந்தைகளுக்கு சமைக்கிறேன், வீட்டை பெருக்குவேன், வீட்டின் பின்புற காய்கறி தோட்டத்தில் நேரத்தை செலவிடுகிறேன்."

வடக்கு_யாழ்ப்பாணம்_எவ்.ஜி.டி_நடமாடுதல்_பெண்_45-65_பயனர்-அல்லாதவர்_C&D

செவிப்புலனற்றவர் எனவே அம்மா தினமும் காலையில் அவளை எழுப்ப வேண்டும். அதன் பிறகு சமையல், பெருக்குதல் மற்றும் துவைத்தல் போன்ற பெரும்பாலான வீட்டு வேலைகளை அவள் செய்கிறாள்.

வடக்கு_யாழ்ப்பாணம்_ஐ.டி.ஐ_கேட்டல்/பேச்சு_பெண்_20-30_பயனர்_A&B

சைகை மொழி மூலம் அவர் பெற்றோருடன் தொடர்பு கொள்ள முடியும். பெற்றோரும் செவிப்புலனற்றவர்கள் என்பதால் அவர்களுக்கும் சைகை மொழி தெரியும். இளைய சகோதரர் கேட்க்கும் திறன் உள்ளவர், ஆனாலும் அவர் சைகை மொழியைப் புரிந்துகொள்கிறார்.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_35-45_பயனர்_C&D

அவரது மனைவியும் காது கேளாதவர், ஆனால் அவர் சைகை மொழியை சரியாகக் கற்கவில்லை. ஆரம்ப நாட்களில் அவளுடன் தொடர்புகொள்வதில் சிக்கல்கள் இருந்தன.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_35-45_பயனர்_C&D

அவரது மனைவி சாதாரணப் பள்ளியில் படித்தார். அவளுக்கு சைகை மொழி புரியவில்லை, ஆரம்ப நாட்களில் அவளுடன் தொடர்புகொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டார், ஆனால் படிப்படியாக அவளுக்கு சைகை மொழியைக் கற்றுக் கொடுத்தார்.

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_கேட்டல்/பேச்சு_ஆண்_35-45_பயனர்_C&D

உணவு தயாரித்தல்

உணவு தயாரித்தல்: உணவு வாங்குதல், உணவு சேமித்தல், சமைத்தல், தகுந்த உணவு பழக்கம், உணவு தயாரிக்கும் பகுதி மற்றும் பாத்திரங்களை சுத்தம் செய்தல்

“நான் என் அத்தைக்கு சமைக்க உதவியாக உருளைக்கிழங்கு, வெங்காயத்தை உரித்து, பொருட்களை அரைக்கின்றேன். அவள் மற்ற எல்லா வேலைகளையும் செய்கிறாள்'.

ஊவா_மொனராகலை_எவ்.இ_பார்வை_பெண்_45-65_பயனர்-அல்லாதவர்_C&D

“நான் ஒரு கூடைக்குத் தண்ணீர் எடுத்துக்கொண்டு, பானைகளையும் பாத்திரங்களையும் கழுவுவதற்காக சமையலறையிலிருந்து வெளியேறுகிறேன். பின்னர் அம்மா பானைகளையும் பாத்திரங்களையும் கொண்டு வருகிறார். நான் எல்லா பாத்திரங்களையும் பாத்திரங்களையும் கழுவுகிறேன்.

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_20-35_பயனர்-அல்லாதவர்_C&D

அவர்கள் காய்கறிகள் மற்றும் பிற அன்றாட தேவைகளை வாங்குவதற்கு நவீன வர்த்தக சிறப்பங்காடிகளை (சூப்பர் மார்க்கெட்) விரும்புகிறார்கள், ஏனெனில் அவர்கள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியதில்லை. பொதுச் சந்தையில் வாங்கினால், எல்லாவற்றையும் சுட்டிக்காட்ட வேண்டும் மற்றும் அளவுகள் எழுதப்பட வேண்டும்.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_35-45_பயனர்_C&D

“நான் சக்கர நாற்காலியில் பொருட்களை (ஷாப்பிங்) வாங்கச்செல்கிறேன். என்னால் அங்கு தள்ளுவண்டிகளைப் பயன்படுத்த முடியாது, கூடையுடன் செல்வது கடினம். மேல் தட்டுகளை எட்டுவதற்கு எனக்கு ஒருவரின் உதவி தேவை. சில நேரங்களில் ஊழியர்கள் கூட என்னை முறைத்துப் பார்க்கிறார்கள்.

மேற்கு_கொழும்பு_எவ்.இ_நடமாடுதல்_ஆண்_பயனர்_35-45_C&D

பொருத்தமான ஆடைகளின் பயன்பாடு

பொருத்தமான ஆடைகளின் பயன்பாடு: துணிகளை வாங்குதல், துணிகளை சேமித்தல், சலவை செய்தல், இஸ்திரி செய்தல் மற்றும் சரிசெய்தல்

"நான் துணிகளை வாங்குவதற்கு அரிதாகவே செல்கிறேன், என் பெற்றோர் மற்றும் உறவினர்களிடமிருந்து நான் துணிகளைப் பரிசாகப் பெறுகிறேன்."

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_20-35_பயனர்_A&B

“சமையலுக்காக உதவிய பிறகு, நான் என் துணிகளைத் துவைக்கிறேன். நான் எல்லா பொருட்களையும் கிணற்றுக்கு எடுத்துச் சென்று அங்கே கழுவுகிறேன்.

ஊவா_மொனராகலை_எவ்.இ_பார்வை_பெண்_45-65_பயனர்-அல்லாதவர்_D

“நான் என் வீட்டில் சலவை இயந்திரத்தைப் பயன்படுத்தியதில்லை, அழுக்குத் துணிகளை குளியலறையில் வைத்திருக்கிறேன்; பெரும்பாலான சமயங்களில் என் அம்மா எனக்காக அவற்றைக் கழுவுவார்."

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_ஆண்_20-35_பயனர்_A&B

“என் அப்பா ஒழுங்கும் கிரமமான முறையில் துணிகளை இஸ்திரி செய்து மற்றும் தொங்கவிடுகிறார். என்னுடைய கால்சட்டை, சட்டைகள் போன்றவை எங்கே உள்ளது என எனக்கு சரியாகத் தெரியும்.. நான் பள்ளிக்கூடம் படிக்கும் போது அவர் அதைச் செய்தார். எனது அணிகலன்களை தினமும் ஒரே இடத்தில் வைக்கும் பழக்கம் எனக்கு உள்ளது”.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_ஆண்_20-35_பயனர்_A&B

தனிப்பட்ட நிதி முகாமைத்துவம் (1)

தனிப்பட்ட நிதியை நிர்வகித்தல்: பணத்தை எண்ணுதல், அடிப்படை நிதிப் பதிவுகளை வைத்திருத்தல், வங்கிச் சேவைகளைப் பயன்படுத்துதல்

"பண நோட்டுகளின் பழைய பதிப்புகளை நாம் சரியாக அடையாளம் காண முடியும், ஆனால் புதியவற்றை அடையாளம் காண்பது கடினம். பணத்தாளிலுள்ள ப்ரெய்ல் புள்ளிகளைப் படிக்க முடியாது. இது எங்களுக்கு சரியான தீர்வு அல்ல.

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_35-45_பயனர்-அல்லாதவர்_C&D

"குறைபாடு காரணமாக ஒரு நபர் கணக்கைத் திறக்க முடியாது என்று வங்கி கூறியது; எப்படியிருந்தாலும், விண்ணப்பத்தை நிரப்ப உங்களுக்கு ஒருவரின் உதவி தேவை. கணக்கு இருப்பைச் சரிபார்ப்பது மற்றும் பணப் பரிமாற்றம் செய்வதும் எங்களுக்குக் கடினம்".

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_பார்வை_ஆண்_35-45_பயனர்-அல்லாதவர்_C&D

"ஏ.டி.எம் எங்களுக்கு எளிதான பயனுள்ள முறையில் இல்லை என்பதால், பணத்தை எடுக்க பாதுகாப்பு அதிகாரியை நாங்கள் நாடுகிறோம்".

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_45-65_பயனர்-அல்லாதவர்_C&D

"இப்போது என்னிடம் ஏ.டிஎம் அட்டை இல்லை, அதை யாராவது திருடிவிடுவார்களோ என்ற பயம் எனக்கு எப்போதும் உண்டு; சில வருடங்களுக்கு முன்பு ஒருவர் எனது கணக்கில் இருந்து 15,000 பணத்தை எடுத்துள்ளார். 5,000 மட்டும் எடுக்கச் சொன்னேன்".

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_பார்வை_ஆண்_35-45_பயனர்_A&B

"சில ஏ.டி.எம்கள் பொத்தான்களில் புள்ளிகளை பதித்துள்ளன, ஆனால் அவை உண்மையில் ப்ரெயில் இல்லை, வங்கிகள் ஏமாற்றுகின்றன".

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_பார்வை_ஆண்_35-45_பயனர்_A&B

"ஒரு கணக்கைத் திறக்க நான் என் மனைவியுடன் (இயலாமைகள் அற்றவர்) வங்கிக்குச் செல்ல வேண்டியிருந்தது, அந்தக் கணக்கு கூட்டுக் கணக்காக இருக்க வேண்டும்".

வடக்கு_யாழ்ப்பாணம்_எவ்.ஜி.டி_பார்வை_ஆண்_35_45_பயனர்_A&B

"நான் ஓரளவு பார்வையற்றவன், என்னால் ஏ.டி.எம்மில் எழுத்துகளைப் படிக்க முடியும். ஆனால் திரையில் உள்ள கண்ணை கூசும் வெளிச்சம் என் பார்வையை கட்டுப்படுத்துகிறது, பிறகு நான் வேறொருவருடைய உதவியை நாட வேண்டும்.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_20-30_பயனர்_A&B

தனிப்பட்ட நிதி முகாமைத்துவம் (2)

தனிப்பட்ட நிதியை நிர்வகித்தல்: பணத்தை எண்ணுதல், அடிப்படை நிதிப் பதிவுகளை வைத்திருத்தல், வங்கிச் சேவைகளைப் பயன்படுத்துதல்

"ஒரு நாள் வங்கி ஊழியர் என் கையொப்பம் தெளிவாக இல்லை என்று என்னிடம் சொன்னார்கள், பிறகு நான் அவரிடம் அந்த கையொப்ப அடையாளம் இறப்பர் முத்திரை (ஸ்டாம்ப்) இல்லை என்று சொன்னேன்".

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_பார்வை_ஆண்-பெண்_20-35_பயனர்-அல்லாதவர்_C&D

"நான் கடனுக்கு விண்ணப்பித்தால், ஊனமுற்றோர் உதவிக்கு நான் தகுதி நீக்கம் செய்யப்படுவேன் என்று வங்கியால் என்னிடம் கூறப்பட்டது".

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_நடமாடுதல்_பெண்_பயனர்_35-45_C

"நீங்கள் வங்கியில் உட்பிரவேசித்தாலும், முகப்பிடங்கள் (கவுண்டர்கள்) மற்றும் ஏ.டி.எம்கள் உயரமாய் உள்ளன".

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_நடமாடுதல்_பெண்_பயனர்_35-45_D

வங்கிகள் தங்களுக்கான கடனை ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்றார்கள். வங்கிகள் அவர்களை நம்பவில்லை. வங்கியுடனான அனைத்து தொடர்புகளுக்கும் அவர்களுக்கு சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் தேவை. வங்கி விதிமுறைகளின்படி கேட்டல் மற்றும் பேச்சு இயலாமைகளுக்கு கடன் பெற தகுதியற்றது என்று ஒருவர் கூறினார்.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_25-45_பயனர்_A&B

"நான் படிக்கும் போது பார்வையற்றோர் பாடசாலை எனக்காக ஒரு கணக்கைத் திறந்தது, எனக்கு 18 வயது ஆனதும் வங்கி கணக்கு வகையைத் தொடர முடியாது என்று கடிதம் மூலம் எனக்குத் தெரிவித்தது, பின்னர் நான் அந்தக் கிளைக்குச் சென்றேன், அவர்கள் என்னை வெவ்வேறு ஊர்களில் உள்ள வெவ்வேறு கிளைகளுக்கு அனுப்பினார்கள். கடைசியாக நான் கணக்கு திறக்க வேண்டாம் என்று முடிவு செய்தேன், என்னால் கையெழுத்திட முடியாததால், என்னை ஒரு கணக்கைத் திறக்க அனுமதிக்க முடியாது என்று சொன்னார்கள்".

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_20_30_பயனர்_A&B

கடன் விண்ணப்பங்கள் சிக்கலானவை.

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_கேட்டல்/பேச்சு _ஆண்_35-45_பயனர்_B

சமூக விவகாரங்களில் ஈடுபடுதல்

சமூக விவகாரங்களில் ஈடுபடுதல்: சாலையில் பாதுகாப்பு, பல்வேறு போக்குவரத்து வழிகளைப் பயன்படுத்தும் திறன், உள்ளூரைச் சுற்றி வழியைக் கண்டறிதல், சொந்தமாக வாகனம் ஓட்டுதல்

"மதியம் வெல்லஸ்ஸ அமைப்பினால் ஏதேனும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், நான் அவற்றிற்கு பங்கேற்பேன்."

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_நடமாடுதல்_பெண்_பயனர்_35-45_C&D

அவர்கள் ஒழுங்கற்ற இடங்களுக்குப் பயணம் செய்யும்போது, அவர்கள் சேருமிடத்தின் பெயரை எழுதி வைத்து; வாகன நடத்துனரிடம் இடத்தை விசாரிப்பார்கள்.

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_கேட்டல்/பேச்சு_ஆண்_பயனர்_35-45_C

“என்னிடம் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் உள்ளது, ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் நான் அதை புதுப்பிக்க வேண்டும். எனது முச்சக்கர வண்டி எனக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. வேறு யாராலும் அதை பாவித்து ஓட்ட முடியாது

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_நடமாடுதல்_பெண்-ஆண்_45-65_பயனர்-அல்லாதவர்_C&D

பதிலளித்தவர்களில் ஒருவரிடம் ஓட்டுநர் உரிமம் உள்ளது, தெரிந்த போலீஸ்காரர் ஒருவர் அவருக்கு உரிமம் பெற உதவியுள்ளார்.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_பெண்-ஆண்_35_45_பயனர்_D

அவர்கள் மோட்டார் சைக்கிளை ஓட்டுகிறார்கள், ஆனால் ஓட்டுநர் உரிமம் இல்லை.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_25-45_பயனர்_A&B

பதிலளித்தவர்களில் ஒருவர் கடந்த 9 ஆண்டுகளாக மோட்டோ சைக்கிளை ஓட்டுகிறார், போலீஸ் சோதனைச் சாவடிகளில் அவர் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களின் அடையாள அட்டையைக் காட்டியுள்ளார்.

வடக்கு_யாழ்ப்பாணம்_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_25-45_பயனர்_C

"நான் பல முறை பேருந்துகளில் இருந்து கீழே விழுந்துவிட்டேன், அதனால் நான் வெளியே பயணம் செய்ய பயப்படுகிறேன்."

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_நடமாடுதல்_பெண்_35-45_பயனர்-அல்லாதவர்_C&D

“பாடசாலையில் படிக்கும் போது நண்பர்களுடன் சரியாக பழக முடியவில்லை. அவர்களுக்கு பார்வையற்றவர்களிடம் எவ்வாறு பேசுவது எனத் தெரியாது”.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_ஆண்_35-45_பயனர்_A

பொழுதுபோக்கு வசதிகளில் ஈடுபடுதல்

பொழுதுபோக்கு வசதிகளில் ஈடுபடுதல்: கிடைக்கக்கூடிய சமூக வளங்களைப் பற்றிய அறிவு, செயல்பாடுகளைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் திட்டமிடுதல், கூட்டாக மற்றும் தனிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

“எனது வார இறுதி நாட்களில் நான் இசை கற்பிப்பதிலும் புத்தகங்களைக் கேட்பதிலும் செலவிடுகிறேன். நான் கொழும்பில் 5 வருடங்கள் வாழ்ந்துள்ளேன். நான் அங்கு இருந்தபோது பெரும்பாலான தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப விஷயங்களை கற்றுக்கொண்டேன். எனது பெரும்பாலான நேரத்தை திறன்பேசி/ஸ்மார்ட் கையடக்க தொலைப்பேசி மற்றும் மடிக்கணினியில் (லேப்டாப்பில்) செலவிடுகிறேன்”.

ஊவா_மொனராகலை_எவ்.இ_பார்வை_ஆண்_பயனர்_20-35_A

“நான் விருந்துபசாரங்களுக்கு (பார்ட்டி) செல்வதும், நண்பர்களுடன் மகிழ்வதும் பிடிக்கும்; ஆனால் என் அம்மாவும் எல்லா விருந்துபசாரங்களுக்கும் வருவார்.

மேற்கு_கொழும்பு_எவ்.இ_பார்வை_ஆண்_20-30_பயனர்_B

"நான் உட்கார்ந்த வண்ணம் கைப்பந்தாட்டம் (வொலி பால்) விளையாடுகிறேன்."

மேற்கு_கொழும்பு_ஐ.டி.ஐ_நடமாடுதல்_பெண்_பயனர்_35-45_A

"படகு ஓட்டுதல் எனது பொழுதுபோக்கு, இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு படகுகள் உள்ளன".

மேற்கு_கொழும்பு_ஐ.டி.ஐ_நடமாடுதல்_பெண்_பயனர்_35-45_A

"நான் பாடசாலை நண்பர்களுடன் விளையாட விரும்பினேன், ஆனால் அவர்களில் யாரும் என்னை அழைக்கவில்லை. நான் பாடசாலையில் தனிமைப்படுத்தப்பட்டேன்.

ஊவா_மொனராகலை_ எவ்.ஜி.டி_நடமாடுதல்_பெண்_பயனர்_35-45_C&D

சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்: சிவில் உரிமைகள் பற்றிய அறிவு, அரசாங்கங்கள் தன்மையைப் புரிந்துகொள்ளல், ஜனநாயக செயல்பாட்டில் பங்கேற்பு

"வெல்லஸ்ஸ அமைப்பில் வேலை செய்ய நேரத்தை செலவிட்டேன், இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு நிறைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நாங்கள் செய்கிறோம்".

ஊவா_மொனராகலை_எவ்.ஜி.டி_நடமாடுதல்_பெண் _பயனர்_35-45_C&D

அவர் எங்கு சென்றாலும் சைகை மொழி பெயர்ப்பாளர் தேவை என்றார். சில நேரங்களில் அவர் பெற்றோருடன் தொடர்புகொள்வதில் பல சிக்கல்களை எதிர்கொள்கிறார், அவர் தனது குழந்தையின் ஆசிரியருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. கிராமத்தில் சமுதாயக் கூட்டங்கள் நடக்கும் போது, அவருக்கு செய்திகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_கேட்டல்/பேச்சு_ஆண்_பயனர்_35-45_C

அவர்களைப் பொறுத்தவரை, அரசு அலுவலகங்களில் அவர்கள் நிறைய சிரமங்களை எதிர்கொள்கின்றனர், அதிகாரிகள் அவர்களின் வருகைக்கான காரணத்தையும் அவற்றை விளக்கும் கடிதங்களையும் எழுதச் சொல்கிறார்கள். அவர்களுக்கு எழுதுவது கடினம். அதிகாரிகள் இன்னொரு நாள் வரச் சொல்கிறார்கள்.

வடக்கு_யாழ்ப்பாணம்_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_பயனர்_35-45_C

“சிவில் உரிமைகள் மற்றும் அனைத்து பயிற்சித் திட்டங்களில் சேரும்படி சில சமயங்களில் நாங்கள் கேட்கப்படுகிறோம், ஆனால் அமைப்பாளர்கள் கட்டிடத்தின் அணுகல் வசதியினைப் பற்றி யோசிக்கவில்லை

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_ஆண்_35-45_பயனர்_A

அவசர காலங்களில் (1)

அவசர காலங்களில்: அவசரகால பிரதிபலிப்புச் சேவைகள், வெளியேற்றம் மற்றும் அறிக்கை செய்தல், தங்குமிடத்திற்கு அணுகல் வசதி மற்றும் மருத்துவ உதவி போன்றவை பற்றிய அறிவு

அவள் செவிப்புலனற்றவள் என்பதால் குழந்தையின் அழுகையை அவளால் கேட்க முடியாது. வீட்டில் அவளும் குழந்தையும் மட்டும் இருக்கும்போது, குழந்தையை சமையலறைக்கு அழைத்துச் செல்கிறாள்.

மேற்கு_கொழும்பு _எவ்.இ_கேட்டல்/பேச்சு_பெண்_பயனர்_35-45_C

ஏதேனும் விபத்து நடந்தால், உடனடியாக உதவி கேட்டு காணொளி (வீடியோ) அழைப்பை மேற்கொள்கின்றனர்.

வடக்கு_யாழ்ப்பாணம்_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_பயனர்_35-45_C

"சில ஆண்டுகளுக்கு முன்பு நான் பேருந்தில் பயணித்தபோது, பேருந்தில் வெடிகுண்டு இருப்பதாக பயணிகளிடம் கூறப்பட்டது. பின்னர் பஸ் அருகில் உள்ள போலீஸ் நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டது. நான் பேருந்தில் இருந்து விரைவாக இறங்க வேண்டியிருந்தது, மற்றவர்கள் தள்ளும் போது கீழே விழுந்தேன், செல்ல வேண்டிய சரியான திசையைக் கண்டுபிடிப்பது எனக்கு ஒரு பிரச்சனையாக இருந்தது. வெள்ளைக் கைத்தடியுடன் எங்களால் ஓட முடியாது".

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_பார்வை_ஆண்_35-45_பயனர்_A&B

"அந்த நாட்களில் நான் டிரெட்மில் ஓட்டத்திற்காக உடற்பயிற்சியகத்திற்குச் (ஜிம்) செல்வேன். ஆனால் ஒரு நாள் டிரெட்மில்லின் வேகம் அதிகரித்தது தெரியாமல் என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் விழுந்தேன். அதன் பிறகு நான் ஜிம்மிற்கு செல்லவில்லை"

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_பார்வை_பெண்_20-30_பயனர்_A&B

"ஒரு நாள் வீட்டை விட்டு வெளியே வரும் போது கீழே விழுந்து கால் முறிந்தது. நான் பாவாடை அணிந்திருந்ததால் வெள்ளைக் கைத்தடி மாட்டிக் கொண்டது. வெள்ளைக் கைத்தடிகளைப் பயன்படுத்தும்போது பொருத்தமான ஆடைகளை அணிய வேண்டும்".

ஊவா_மொனராகலை_ஐ.டி.ஐ_பார்வை_பெண்_பயனர்_35-45_C&D

அவசர காலங்களில் (2)

அவசர காலங்களில்: அவசரகால பிரதிபலிப்புச் சேவைகள், வெளியேற்றம் மற்றும் அறிக்கை செய்தல், தங்குமிடத்திற்கு அணுகல் வசதி மற்றும் மருத்துவ உதவி போன்றவை பற்றிய அறிவு

“ஒரு நாள் நான் அம்மாவுடன் இருந்தபோது திருடர்கள் என் வீட்டிற்குள் புகுந்தனர். பணம் மற்றும் நகைகள் எங்கே இருந்தன என்று காட்டுவதைத் தவிர; எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை."

ஊவா_மொனராகலை _எவ்.ஜி.டி_நடமாடுதல்_பெண் _ பயனர் _35-45_C&D

“சுனாமி தாக்கியபோது நான் முல்லைத்தீவில் இருந்தேன். எனக்கு பெரிதாக எதுவும் நடக்கவில்லை. ஆனால் அது வரும் வரை எங்களுக்குத் தெரியாது, நாங்கள் அனைவரும் இடம்பெயர்ந்தோம்".

வடக்கு_யாழ்ப்பாணம் _எவ்.ஜி.டி_ நடமாடுதல்_ பெண்_பயனர்-அல்லாதவர்_35-45_C&D

அவசர காலங்களில் கூட, காதுகேளாத நோயாளிகளை மட்டும் மருத்துவமனைகள் அனுமதிப்பதில்லை. யாராவது அவர்களுடன் இருக்க வேண்டும்.

மேற்கு_கொழும்பு _எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு_ஆண்_35-45_பயனர்_D

“நான் அந்த அச்சுக்கூடத்தில் காது கேளாத மற்ற இரண்டு சக ஊழியர்களுடன் வேலை செய்து கொண்டிருந்தேன். என் விரல்கள் இயந்திரத்தில் சிக்கிக்கொண்டன, நான் கத்தினேன், மற்றவர்கள் நான் வேடிக்கைக்காக அவர்களிடம் இருந்து மறைக்க முயற்சிக்கிறேன் என்று நினைத்தார்கள்.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு _ஆண்_25-45_பயனர் _A&B

வெள்ளம் அதிகரித்து வருவதால் கிராம மக்கள் அவரையும் மனைவியையும் இரவில் எழுப்ப முயன்றனர், ஆனால் அவர்கள் கேட்கவில்லை, காலையில் மட்டுமே அவர்கள் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதை உணர்ந்தார்கள்.

மேற்கு_கொழும்பு_எவ்.ஜி.டி_கேட்டல்/பேச்சு _ஆண்_25-45_பயனர்_A&B

இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

பொது போக்குவரத்து பயணிகள் பிரயாணம்

போக்குவரத்து சேவைகளின் அணுகல் மற்றும் பயன்பாடு இயலாமை வகைகளில் இயக்கத்திற்கு முக்கிய தடையாக உள்ளது. வீட்டிற்கு வெளியே வாழ்க்கை போக்குவரத்து சேவைகளின் அணுகல் வசதியி மூலம் தீர்மானிக்கப்படுகிறது. பொதுப் போக்குவரத்துச் சேவைகளின் பின்வரும் நிலைகளில் இயலாமைகளைக் கொண்டுள்ள நபர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர்.



குறைந்த இயக்கம் கொண்ட நபர்கள் பொது போக்குவரத்தைப் பயன்படுத்தும் போது சிரமப்படுகிறார்கள்

குறைந்த இயக்கம் கொண்ட நபர்கள் - எந்தவொரு உடல் இயலாமைகளும் அல்லது வயதின் விளைவாக போக்குவரத்தைப் பயன்படுத்தும் போது அவரது நடமாடுதல் இயக்கம் குறைகிறது மற்றும் அனைத்து பயணிகளுக்கும் கிடைக்கக்கூடிய சேவைகளின் குறிப்பிட்ட தேவைகளுக்கு தகுந்த கவனம் மற்றும் தழுவல் தேவை. இது பின்வரும் வகைகளை உள்ளடக்கியது:

- சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்கள்
- குழந்தைகளுடன் மக்கள்
- கனமான அல்லது பெரிய சாமான்களைக் கொண்டுவருபவர்கள்
- முதியவர்கள்
- கர்ப்பிணி பெண்கள்
- பார்வை குறைபாடுள்ளவர்கள்
- செவித்திறன் குறைபாடுள்ளவர்
- சிறிய உயரமுள்ள மக்கள்

போக்குவரத்து மற்றும் இயக்கத்தைப் பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

குறைந்த இயக்கம் கொண்ட நபர்களை அடையாளம் காணல்

செவித்திறன் இயலாமைகளைக் கொண்டுள்ள நபர் காது கேட்கும் கருவியை அணிந்திருந்தால் அல்லது சைகை மொழியைப் பயன்படுத்தாதவரை கவனிக்க முடியாது.
பார்வைக் குறைபாடுள்ளவர்களில் சிலர் வெள்ளைக் கைத்தடி போன்ற உதவி சாதனப் பொருட்களைப் பயன்படுத்தாவிட்டால் கவனிக்கப்பட மாட்டார்கள்.
சிலர் பொது இடங்களில் உதவி சாதன பொருட்களை பயன்படுத்த விரும்ப மாட்டார்கள்

செவித்திறன் மற்றும் பேச்சு குறைபாடு

மற்றவர்களிடம் தகவல் கேட்பதில் சிரமம்
படிப்பறிவற்ற பயணிகளால் சமிங்ஞை அடையாள அறிவிப்பு பலகைகளை படிக்க முடியவில்லை

பார்வை குறைபாடு

அணுகக்கூடிய வடிவத்தில் கொடுக்கப்பட்ட தகவலை நம்பியிருக்க வேண்டும்,
எதிரே வரும் வாகனங்கள் பற்றி தெரியாது
பேருந்தில் ஏற சரியான வரிசைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை
பேருந்தின் இருக்கையை அடையாளம் காண்பதில் சிரமம் மற்றும் பயணச்சீட்டை (டிக்கெட்) வாங்க பணம்
பேரூந்திற்கும் நடைபாதைக்கும் இடையே உள்ள இடைவெளியால் பேரூந்தில் ஏறுவதும் இறங்குவதும் சிரமமாக உள்ளது

நடமாடுதல் இயக்கம் குறைபாடு

ஏற்றுத்தடங்களுக்கான அணுகலைத் தடுக்கும் தடைகள்
இறங்க நேரம் எடுக்கும்
சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்தும் நபர்களுக்கு நேர அட்டவணைகள் மிக உயரத்தில் தொங்கவிடப்பட்டுள்ளன

கல்வி சேவை தொடுப்புள்ளிகள்

கல்விச் சேவையானது ஆரம்ப மற்றும் உயர் கல்வியை அணுகவும் மற்றும் அடைவதற்கான திறனை உள்ளடக்கியது. அனைத்து மாணவர்களும் கற்றல் பொருட்களை அணுகக்கூடியதாயும் மற்றும் ஒத்த வாய்ப்புகளையும் வழங்க வேண்டும். இயலாமைகளைக் கொண்டுள்ள மாணவர்கள் கல்விச் சேவையின் பின்வரும் நிலைகளில் சவால்களை எதிர்கொள்கின்றனர்.



கல்வியைத் தொடர்வதில் எதிர்கொள்ளும் சவால்கள் (1)

செவித்திறன் குறைபாடுடையவர்

ஆரம்பக் கல்விக்கான பொதுப் பள்ளிக்கூடங்களில் சேர்வதால் எதிர்கொள்ளும் சிரமங்கள்
சில வருடங்கள் பொதுப் பள்ளியில் படித்த பிறகு சிறப்புப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதில் உள்ள சிரமங்கள்
பள்ளிக்கூடங்களில் திறமையான ஆசிரியர்கள் பற்றாக்குறை: அடையாளங்களிலிருந்து வாக்கியங்களை உருவாக்குதல்
ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்திட்டம் தேவை
சைகை மொழியின் வரம்பு
அணுகக்கூடிய வடிவத்தில் கற்கை பொருட்கள் இல்லாதது
மாணவர்களுக்குப் புரிந்துகொள்வதிலும் இலக்கணத்திலும் சிரமம் உள்ளது (காலங்களைப் புரிந்துகொள்வது)
தேர்வுத் தாள்களில் உள்ள அறிவுறுத்தல்களைப் புரிந்துகொள்வதில் சிரமம் உள்ளது.

நடமாடுதல் இயக்கம் குறைபாடு

பொது போக்குவரத்து மூலம் பள்ளிக்கூடங்களுக்கு பயணம்
பள்ளிக்கூடங்களில் இயலாமைகளுக்கு ஏற்ற வகுப்பறைகள் மற்றும் ஓய்வு அறைகள் இல்லாததால், கட்டிடங்கள் மற்றும் கற்கை பொருட்களின் அணுகல்தன்மையின் அடிப்படையில் மாணவர்கள் பாடங்களை தேர்வு செய்ய வேண்டும்.

கல்வியைத் தொடர்வதில் எதிர்கொள்ளும் சவால்கள் (2)

பார்வை குறைபாடுகள்

கல்வி நிறுவனங்கள், வகுப்பறைகள் மற்றும் ஓய்வு அறைகளுக்கு உடல் ரீதியானஅணுகல் வசதி பற்றாக்குறை
கல்வி நிறுவனங்களில் பாதை வழிக்கண்டறிதல் சிரமம்
அணுகக்கூடிய வடிவங்களில் கற்கை பொருட்களின் பற்றாக்குறை
தேர்வுத் தாள்கள் அணுகக்கூடிய வடிவங்களில் வழங்கப்படவில்லை
தேர்வின் போது பொருத்தமான எழுத்தாளர்களைக் கண்டுபிடிப்பதில் சிரமம்
தேர்வுகளில் மாற்றுக் கேள்விகள் வழங்கப்படுவதில்லை
பள்ளிகளில் திறன்பேசி/ஸ்மார்ட் கையடக்க தொலைப்பேசிகளைப் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள்

சுகாதார சேவைகளைப் பெறுவதில் நோயாளியின் பயணம்

மாற்றுத்திறனாளிகள் குறைந்தபட்சம் மற்றவர்களைப் போலவே பொது சுகாதாரத் தேவைகளைக் கொண்டுள்ளனர். சில குறைபாடுகளுக்கு விரிவான சுகாதார பராமரிப்பு தேவைப்படுகிறது. குறைபாடுகள் உள்ளவர்கள் சுகாதார சேவைகளின் பின்வரும் நிலைகளில் சவால்களை எதிர்கொள்கின்றனர்.



சுகாதார சேவைகளைப் பெறுவதில் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

இயலாமைகள் மற்றும் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களை கண்டறிதல்

இயலாமைகளைக் குறித்த தாய்வழி கல்வியின் பற்றாக்குறை

மருத்துவ மையத்தின் சரியான நேரத்தில் தலையீடுகள் கிடைக்காமை,

அடிமட்ட சுகாதார அதிகாரிகளிடமிருந்து போதுமான கண்காணிப்பு இல்லை

பொது மக்களுக்கு கல்வி கற்பதற்கு இயலாமைகளுக்கான பொது சுகாதார கல்வி திட்டங்கள் இல்லாதது

பள்ளிக்கூட பாடத்திட்டங்களில் அடிப்படை இயலாமை அடையாளம் காணும் பயிற்சி இல்லாதது

சேவைகளைப் பெறும் இயலாமைகளைக் கொண்டுள்ளவர்களை அடையாளம் காண்பதில் சுகாதார மையங்களில் போதிய செயல்முறை இல்லை

ஆரம்ப சுகாதார சேவைக்கான அணுகல்

சுகாதாரப் பாதுகாப்பு மையங்களுக்கு உடல் ரீதியானஅணுகல் வசதி பற்றாக்குறை

சுகாதாரப் பாதுகாப்பு மையங்களில் ஒலி/காணொளி தொடர்பாடல் மற்றும் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாத நிலை

சுகாதாரப் பாதுகாப்பு மையங்களுக்குச் செல்வதில் சிரமம்

அணுகக்கூடிய வடிவங்களில் சுகாதாரத் தகவல்கள் கிடைக்காமை

நிதி உள்ளடக்கத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் (1)

நிதி உள்ளடக்கம் என்பது வருமான ஆதாரங்கள் மற்றும் நிதிச் சேவைகளை அணுகும் திறனைக் குறிக்கிறது. ஒரு தொழிலை உருவாக்குவது மற்றும் நிதி பரிவர்த்தனைகளை சுயாதீனமாக நடத்துவது ஆகியவை இதில் அடங்கும். இயலாமைகளைக் கொண்டுள்ளவர்கள் நிதி உள்ளடங்கலான சேர்க்கைக்கு இடையூறாக பின்வரும் தடைகளை எதிர்கொள்கின்றனர்.

செவித்திறன் குறைபாடுடையவர்கள்

முறையான வேலைத் துறையில் மிகக் குறைவான பிரதிநிதித்துவம்

அவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள் அல்லது நீல காலர் தொழிலாளர்கள் (கடின உடல் உழைப்பாளிகள்)

தொழில் பயிற்சிக்கான வாய்ப்புகள் குறைவு

வங்கிகளில் தகவல் தொடர்பாடலுக்கான தடைகள்

அவர்களின் குறைபாடுகள் காரணமாக வங்கிகள் கடன் வழங்கத் தயங்குகின்றன

வங்கி பரிவர்த்தனைகளின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் புரிந்துகொள்வதில் சிரமம்

நிதி உள்ளடக்கத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் (2)

பார்வை குறைபாடுகள்

இணையதளங்களில் அணுக முடியாத வேலை வாய்ப்பு அறிவிப்புகள்

வங்கிகள் மற்றும் ஏ.டி.எம் களுக்கு உடல் ரீதியாக அணுகும் வசதி பற்றாக்குறை

வங்கிகளில் வழிசெலுத்துவதில் சிரமம்

அணுகக்கூடிய வடிவங்களில் வங்கி ஆவணங்களின் பற்றாக்குறை

பல்வேறு நாணயத் தாள்களை வேறுபடுத்துவதில் உள்ள சிரமங்கள்

கடவுச்சொற்கள் மற்றும் பின்களைப் பயன்படுத்தும் போது அந்தரங்கம்/இரகசியம் பேணுவதில் சிக்கல்கள்

பார்வைக் குறைபாடு உள்ளவர்களின் கணக்கில் கடன் வழங்குதல் மற்றும் வங்கிக் கணக்கு தொடங்குதல் போன்ற சேவைகளை அணுகுவதில் சில வங்கி ஊழியர்களின் தயக்கம்

இயக்கம் குறைபாடு

இயக்கம் குறைபாடுள்ள தொழிலாளர்களுக்கு வசதியாக கூடுதல் முதலீடுகள் தேவை என்பதை முதலாளிகள் அணுமானிக்கின்றனர்.

வங்கிகள் மற்றும் ஏ.டி.எம் களுக்கு உடல் ரீதியாக அணுகும் வசதி பற்றாக்குறை

சக்கர நாற்காலியில் பயணிப்பவர்களுக்கு வங்கி முகப்பிடங்ககளை (கவுன்டர்களை) அணுக முடியாது

உதவி சாதன தொழில்நுட்ப பயன்பாட்டிற்கான தடைகள்

திறன்பேசி/ஸ்மார்ட் கைப்பேசி அடிப்படையிலான உதவி தொழில்நுட்ப பயன்பாட்டிற்கான தடைகள்

- **திறன்பேசி/ஸ்மார்ட் கைப்பேசி, தரவு மற்றும் மென்பொருள் செயலிகளின் மலிவு:** நிலையான வருமானம் இல்லாதவர்களுக்கு, சாதனங்களின் விலை அதிகம். செவித்திறன் மற்றும் பேச்சு குறைபாடுள்ளவர்களுக்கு காணொளி அழைப்பிற்கும், பார்வை குறைபாடுள்ளவர்களுக்கு வழிசெலுத்தலுக்கும் கூடுதல் இணைய தரவு தேவைப்படுகிறது. தரவுகளின் விலை அவர்களுக்கு கவலை அளிக்கிறது. பார்வைக் குறைபாடுள்ளவர்கள் வரையறுக்கப்பட்ட அம்சங்களுடன் பயன்பாடுகளின் பரீட்சை மென்பொருள் செயலிகளைப் பயன்படுத்துகின்றனர் (பணம் கணிப்பான் மற்றும் வழிசெலுத்தல் மென்பொருள் செயலிகள்).

- **கையடக்க மென்பொருள் செயலிகளின் வரம்பு குறைவாக உள்ளது:**பெரும்பாலான பயன் மென்பொருள் செயலிகள் உள்ளூர் மொழிகளில் கிடைக்காது (வழிசெலுத்தல் மென்பொருள் செயலிகள்), இலங்கை சைகை மொழிக்கான மென்பொருள் செயலிகள் மிகக் குறைவு.

- **இணைப்பு சிக்கல்கள்:** வழிசெலுத்தல் மற்றும் காணொளி அழைப்பு பயன்பாடுகளுக்கு நிலையான இணைப்பு தேவை.

- **உதவி தொழில்நுட்பத்தில் குறைந்த விழிப்புணர்வு:** பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடுள்ளவர்களுடன் ஒப்பிடுகையில், இயக்கம் குறைபாடுள்ளவர்கள் மற்றும் பார்வை குறைபாடுள்ளவர்களிடையே உதவி தொழில்நுட்பம் பற்றிய அறிவும் விழிப்புணர்வும் அதிகமாக உள்ளது.